வடக்கின் முதல் நாளிதழ் - Estd 1959

Reg. No. : P. 1632

விலை ரூ. 30/=

# ஈழநாடு

Eelanadu ———— ඊළනාඩු




மாருதி
Money Exchange (Pvt) Ltd.
இல.285, காலி வீதி, வெள்ளவத்தை, கொழும்பு 06
T.P: 011 236 2086
இவ் அனைத்து சேவைகளையும் இங்கு பெற்றுக் கொள்ளலாம்.
இல.390, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
T.P: 021 221 4433
076 284 4443
MoneyGram. money transfer — மணிகிராம் பணப்பரிமாற்றம்
Ria MONEY TRANSFER — றியா பணப்பரிமாற்றம்
WESTERN UNION MONEY TRANSFER — வெஸ்ரேண் யூனியன் பணப்பரிவர்த்தனை

Email : eelanaduweekly@gmail.com | மலர் : 06 | 11.02.2025 செவ்வாய்க்கிழமை | இதழ் : 43 | பக்கங்கள் : 12

# தையிட்டி திஸ்ஸ விகாரை காணிகளை கையளிக்கக் கோரி 2 நாள் போராட்டம்!

## இன்றும் நாளையும் நடத்துவதற்கு ஏற்பாடு

யாழ்ப்பாணம், பெப். 11

தையிட்டி திஸ்ஸ விகாரை அமைந்துள்ள மற்றும் அதனைச் சூழவுள்ள தமது காணிகளை மீளக் கையளிக்கக் கோரி காணி உரிமையாளர்கள் இன்று செவ்வாய்க்கிழமை, நாளை புதன் கிழமை ஆகிய இரு நாட்களிலும் தொடர் போராட்டத்தில் ஈடுபடவுள்ளனர்.

தையிட்டி பகுதியில் உள்ள சுமார் 07 ஏக்கர் காணியை அடாத்தாக கையகப்படுத்தி , எவ்வித அனுமதிகளும் இன்றி சட்டவிரோதமாக திஸ்ஸ விகாரை எனும் விகாரை கட்டப்பட்டுள்ளதாகக் குற்றம் சாட்டப்பட்டுள்ளது.

குறித்த பகுதியில் இருந்த மக்கள் யுத்தம் காரணமாக கடந்த 1990ஆம் ஆண்டு கால பகுதியில் அங்கிருந்து வெளியேறியிருந்தனர். பின்னர் அப்பகுதியை உயர்பாதுகாப்பு வலயமாக இராணுவத்தினர் பிரகடனப்படுத்தியிருந்தனர்.

பின்னர் யுத்தம் நிறைவடைந்த

11

# தையிட்டி திஸ்ஸ விகாரை உடைக்கப்படவேண்டும்!

## ஜனநாயக தமிழ்த் தேசியக் கூட்டணி

யாழ்ப்பாணம், பெப். 11

தையிட்டி விகாரை உடைக்கப்படவேண்டியதுடன் அதற்கு எதிராக மேற்கொள்ளப்படும் ஆர்ப்பாட்டத்துக்கு ஜனநாயக தமிழ்த் தேசியக் கூட்டணி முழுமையான ஆதரவு வழங்கும் என்று கூட்டணியின் முக்கியஸ்தரும் பாராளுமன்ற உறுப்பினருமான செல்வம் அடைக்கலநாதன் தெரிவித்தார்.

ஜனநாயக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பங்காளிக் கட்சிகளுக்கு இடையிலான கலந்துரையாடல் வவுனியாவில் நேற்று திங்கட்கிழமை நடைபெற்றது.

அதன் பின்னர் ஊடகவியலாளர் சந்திப்பில்

11

# மீண்டும் மின்வெட்டு!

கொழும்பு, பெப். 11

நேற்றும் இன்றும் தலா ஒன்றரை மணி நேரம் சுழற்சி முறையில் மின்வெட்டை அமுல்படுத்துவதற்கு இலங்கை மின்சார சபை தீர்மானித்துள்ளது.

நேற்று நடைபெற்ற விசேட கலந்துரையாடலில் இந்த தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளதாக இலங்கை மின்சார சபை தெரிவித்துள்ளது.

இது தொடர்பான யோசனை பொதுப் பயன்பாடுகள்

11

# மாகாண சபை முறையில் நாம் கைவைக்கமாட்டோம்

## இந்த வருடம் நிச்சயம் தேர்தல் நடக்கும் அநுர தலைமையிலான அரசு அறிவிப்பு




கொழும்பு, பெப்ரவரி 11

மாகாண சபை முறைமையென்பது தாம் வென்றெடுத்த உரிமையென தமிழர்கள் கருதுவதால் அந்த உரிமையில் தேசிய மக்கள் சக்தி அரசாங்கம் கை வைக்காது. இவ்வருட இறுதியில் அல்லது அடுத்த வருட முற்பகுதியில் மாகாண சபைத் தேர்தல் நிச்சயம் நடத்தப்படும் என்று யாழ்.மாவட்ட ஒருங்கிணைப்புக்குழுத் தலைவரும், கடற்றொழில் மற்றும் நீரியல் கடல் வளங்கள் அமைச்சருமான இ. சந்திரசேகர் தெரிவித்தார்.

11

### தையிட்டி விகாரை விவகாரத்தில்

# மக்களின் விருப்பமே எங்களின் தீர்மானம்

கொழும்பு, பெப். 11

தையிட்டி விகாரை விடயத்தில் மக்களின் விருப்பத்துக்கு அமைவாக எமது தீர்மானம் இருக்கும் என்று தெரிவித்துள்ள அமைச்சர் இராமலிங்கம் சந்திரசேகர், மீண்டும் இனவாதம், மதவாதம் தலைதூக்குவதற்கு இடமளிக்கப்போவதில்லை என்றும் குறிப்பிட்டார்.

யாழ்.மாவட்ட செயலகத்தில் திங்கட்கிழமை சீன அரசாங்கத்தின் உதவிப்பொருட்களை கையளிக்கும் நிகழ்வில் பங்கெடுத்திருந்த அவர் அதன் பின்னர் தையிட்டி விகாரை சம்பந்தமாக

11

# 2 பஸ்கள் மோதி விபத்து; நான்கு பேர் உயிரிழப்பு!

## 28 பேர் காயமடைந்து வைத்தியசாலையில் குருநாகல், தோரயாய பகுதியில் சம்பவம்

கொழும்பு, பெப். 11

குருநாகல், தோரயாய பகுதியில் இரண்டு பயணிகள் பஸ்கள் ஒன்றுடன் ஒன்று மோதி விபத்துக்குள்ளானதில் ஒரு பெண் உட்பட நான்கு பேர் உயிரிழந்தனர் என பொலிஸார் தெரிவித்தனர்.

மேலும் 28 பேர் காயமடைந்து வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர். அவர்களில் மூவரின் நிலை கவலைக்கிடமாக உள்ளதாகத்

11

# காங்கேசன்-நாகை கப்பல் சேவை நாளை முதல் மீண்டும் ஆரம்பம்!


சென்னை, பெப். 11

காங்கேசன்துறை-நாகபட்டினம் இடையிலான கப்பல் போக்குவரத்து சேவை மீண்டும் நாளை புதன் கிழமை ஆரம்பமாகிறது. சிவகங்கை கப்பல் சேவை நிறுவனத்தின் தலைவர் சுந்தரராஜ் பொன்னுசாமி இதனைத் தெரிவித்துள்ளார்.

நாளை காலை 7.30 அளவில் நாகப்பட்டினத்தில் இருந்து பயணத்தை ஆரம்பிக்கும் கப்பலானது காங்கேசன்துறையை வந்தடைந்த பின்னர் மீண்டும் பி.ப 1.30 மணியளவில்

11

# டுபாய் சர்வதேச விமான நிலையத்தில் ஜனாதிபதிக்கு கோலாகல வரவேற்பு!



கொழும்பு, பெப். 11

ஐக்கிய அரபு இராச்சியத்தின் டுபாயில் இன்று முதல் 13 ஆம் திகதி வரை நடைபெறும் 2025 சர்வதேச அரச உச்சி மாநாட்டில் பங்கேற்பதற்காக நாட்டிலிருந்து புறப்பட்ட ஜனாதிபதி அநுரகுமார

11

# பாலச்சந்திரன் கொலைக்கு மகிந்த வருத்தம் காலமும் கர்மாவும் கொடுத்த தண்டனையே!

## கூறுகிறார் சிறீதரன் எம்.பி.

கிளிநொச்சி, பெப். 11

விடுதலைப் புலிகளின் தலைவர் பிரபாகரனின் மகன் பாலச்சந்திரன் கொலை செய்யப்பட்டமை தொடர்பாக மகிந்த ராஜபக்ஷ வருந்துவதாகச் செய்திகள் வெளிவந்துள்ளன. இன்றாவது ஈழத் தமிழர்களுக்கு நடந்த அநீதி தொடர்பாக மெல்ல வாய் திறக்க நினைப்பது காலமும் கர்மாவும் அவர்களுக்கு கொடுத்த தண்டனையாகவே கருதுகிறேன் என பாராளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீதரன் தெரிவித்தார்.

பாராளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீதரனின விசேட ஒதுக்கீட்டில் நான்கு மில்லியன் ரூபாய் செலவில் கிளிநொச்சி மத்திய கல்லூரி பிரதான நுழைவாயில் வளைவு நிர்மாணிக்கப்பட்டது.

11

# வவுனியா வடக்கில் தமிழ்க் கட்சிகள் இணைந்து போட்டியிடக் கலந்தாய்வு

வவுனியா, பெப். 11

எதிர்வரும் உள்ளூராட்சிமன்றத் தேர்தலில் வவுனியா வடக்கு பிரதேச சபையில் தமிழ்க் கட்சிகள் இணைந்து போட்டியிடுவது தொடர்பாக கலந்துரையாட வுள்ளதாக ஜனநாயக தமிழ்த் தேசியக் கூட்டணி தெரிவித்துள்ளது.

ஜனநாயக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பங்காளிக் கட்சிகளுக்கிடையிலான கலந்துரையாடல் ஒன்று வவுனியாவில் நேற்று திங்கட்கிழமை இடம்பெற்றது.

அதன் பின்னர் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கும்போதே முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் சிவசக்தி ஆனந்தன் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

11

**உண்மைகள் புனிதமானவை: கருத்துக்கள் சுதந்திரமானவை**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழ்த் தேசியக் கட்சிகள் ஒரு பொதுவான அரசியல் குறிக்கோளை முன்வைக்கவேண்டும்

## சி. வி. விக்னேஸ்வரன் கூறுகிறார்

கொழும்பு, பெப். 11

தமிழ்த் தேசிய கட்சிகள் ஒரு பொதுவான அரசியல் குறிக்கோளை முன்வைக்க வேண்டும் என வட மாகாண சபையின் முன்னாள் முதலமைச்சர், முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் சி. வி.விக்னேஸ்வரன் தெரிவித்துள்ளார்.

வடக்கு - கிழக்கானது இலங்கையின் ஒரு அம்சமாகத் தொடர்ந்து இருப்பதே அதன் பாதுகாப்புக்கும் வருங்கால வாழ்க்கைக்கும் உசிதமானது எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

இந்த விடயங்களை உள்ளடக்கி சி. வி. விக்னேஸ்வரன் அறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ளார்.

அந்த அறிக்கையில் அவர் மேலும் குறிப்பிட்டுள்ளதாவது-

தற்போது எல்லோரதும் குறிக்கோள் முழுமையான அதிகாரப் பகிர்வு வடக்கு, கிழக்கு மாகாணங்களுக்கு வழங்கப்பட வேண்டும் என்பதேயாகும். அதற்கு மேல் வெளிப்படையாக நாம் சிந்திக்கத் தலைப்பட்டால் சட்டத்துடன் போராட வேண்டி வரும். ஏற்கனவே சட்டத்துடன் போராடி ஆயுதங்கள் மௌனித்திருக்கும் நிலையை நாம் கருத்தில் கொள்ள வேண்டும்.

அந்த அடிப்படையில் புதியதொரு கூட்டமைப்பை சகல தமிழ்த் தேசியக் கட்சிகளையும் உள்ளடக்கி உருவாக்குவது கடினமில்லை. ஆனால், அதில் உள்ள சிக்கல் என்னவென்றால் இதுவரை காலமும் பல தமிழ்த் தேசியக் கட்சிகளை வழிநடத்தி வரும் தலைமைத்துவங்கள் மக்களின் சந்தேகத்துக்கும் வெறுப்புக்கும் ஆளாகியுள்ளார்கள்.

அவர்கள் மக்களுக்குப் போராடுவதாகக் கூறி தமது சுயநலத்துக்காகவே அரசியல் செய்து வந்துள்ளார்கள் என்று மக்கள் நம்புகின்றார்கள். கடைசியாக நடந்த தேர்தல்கள் தமிழ் மக்களின் இந்த மனோநிலையை ஒருவாறு பிரதிபலிக்கின்றது.

ஆகவே தமிழ்த் தேசியக் கட்சிகள் அனுபவமுள்ள படித்த பண்புள்ள சுயநலமற்ற பிரதிநிதிகளை ஒரு புதிய கூட்டமைப்பில் இடம்பெற வழிவகுக்க வேண்டும். 2001 ஆம் ஆண்டு ஒக்டோபரில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு உருவாகிய போது பல சிக்கல்கள் இருந்தன.

பின்னணியில் புலிகளின் ஆயுத பலம் இருந்தது. இன்று அவ்வாறான நிலை இல்லை. தமிழ் மக்களின் வருங்காலத் தொடர் வாழ்க்கைக்கு எவ்வாறு, முழு அதிகாரப் பகிர்வு தேவையாக உள்ளது என்பதைப் புதிதாக இயற்றப்படும் தமிழ்த் தேசிய அரசியல் கட்சிகளின் கைசுட்டும் அமைப்பானது சட்ட ரீதியாக, தர்க்க ரீதியாக, அனுபவ ரீதியாக அரசாங்க அதிகார வர்க்கத்தினருடன் பேசி ஒரு தீர்வைப் பெறக் கூடியதாக அமைய வேண்டும்.

உணர்ச்சிகளுக்கும் சுயலாபத்துக்கும் இடங்கொடுக்காது தமிழ் மக்களின் வருங்காலம் கருதி அறிவுபூர்வமாகப் பேச்சுகள் அமைய வேண்டும். ஒவ்வொரு கட்சியும் மூன்றுக்கு கூடாமல் தமது பிரதிநிதிகளை உடனே சிபாரிசு செய்ய வேண்டும்.

இவர்கள் சேர்ந்து ஒரு தவிசாளரை தம்முள் இருந்து நியமிக்க வேண்டும். இக் குழு, கட்சிகளின் சார்பில் அரசாங்கத்துடன் பேச்சுகளில் ஈடுபட வேண்டும். பிரதிநிதிகள் அரசியல்வாதிகள் அல்லாதபடியால் அரசாங்கமும் விடயம் அறிந்த உறுப்பினர்களை அல்லது அலுவலர்களை நியமிப்பார்கள்.

அவர்கள் சேர்ந்து தரும் முடிவு பின்னர் அனைத்து கட்சிகளாலும் பரிசீலிக்கப்படும். தமிழ் மக்களுக்கு எவ்வாறான அதிகாரப் பகிர்வு தரப்பட வேண்டும் என்று அரசாங்கம் எல்லாக் கட்சிகளுடனும் சேர்ந்து தீர்மானிக்கலாம். அதற்கான ஆரம்ப வேலைகளை எமது பல்கலைக்கழக அறிவிற் சிறந்த ஆன்றோர் தொடங்க வேண்டும். வேண்டுமெனில் எமது வெளிநாட்டுத் தமிழ் அரசியல் நிபுணர்கள் எம்முடன் பேச்சுக்களில் கலந்து கொள்ள வேண்டும்- என்று குறிப்பிட்டுள்ளார். (அ)

## "ஐ. எம். எவ். நிபந்தனைப்படியே அரசு செயல்படுகிறது"

கொழும்பு, பெப். 11

சர்வதேச நாணய நிதியத்தின் நிபந்தனைகளுக்கு அமையவே அரசாங்கம் செயற்பட்டு வருவதாக பத்தரமுல்லை சீலரத்ன தேரர் தெரிவித்தார்.

கொழும்பில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போதே அவர் இதனை கூறினார். மேலும், அரசாங்கம் 2025 ஆம் ஆண்டுக்கான வரவு-செலவுத்திட்டத்தை இம்மாதம் முன்வைக்கவுள்ளது. இந்த வரவு-செலவுத்திட்டத்தினுள் நாட்டு மக்களுக்கு அரசாங்கம் வழங்கவுள்ள நிவாரணம் என்ன ? அத்தகைய நிவாரணங்கள் எதுவும் இந்த வரவு-செலவுத் திட்டத்தினுள் உள்வாங்கப்பட்டுள்ளதா? - என்றும் கேட்டார்.

## பாராளுமன்ற விசேட அமர்வு

கொழும்பு, பெப். 11

விசேட பாராளுமன்ற அமர்வை 14ஆம் திகதி வெள்ளிக்கிழமை நடத்துவதற்கு பாராளுமன்ற அலுவல்கள் பற்றிய குழுவில் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

உள்ளூர் அதிகார சபைகள் தேர்தல்கள் விசேட ஏற்பாடுகள் சட்டமூலம் தொடர்பில் உயர் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்ட மனுக்கள் மீதான தீர்மானத்தைச் சபாநாயகர் பாராளுமன்றத்துக்கு அறிவிக்கும் நோக்கில் 14ஆம் திகதி காலை 9.30 மணிக்கு பாராளுமன்றத்தைக் கூட்டுவதற்கு பாராளுமன்ற அலுவல்கள் பற்றிய குழுக் கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டதாக பாராளுமன்றத்தின் பதில் செயலாளர் நாயகம் சமிந்த குலரத்ன தெரிவித்தார்.

பிரதி சபாநாயகர் ரிஸ்வி சாலியின் தலைமையில் கூடிய கூட்டத்திலேயே இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டது.

இதற்கமைய பாராளுமன்றத்தின் நிலையியற் கட்டளை 16இன் ஏற்பாடுகளுக்கு அமைய பிரதமரினால், சபாநாயகரிடம் விடுக்கப்படும் கோரிக்கைக்கு அமையப் பாராளுமன்றத்தைக் கூட்டுவதற்கான அழைப்பு விடுக்கப்படுகின்றது. அத்துடன், 14ஆம் திகதி இந்தச் சட்டமூலத்தை ஆராய்வதற்காக சம்பந்தப்பட்ட அமைச்சுசார் ஆலோசனைக் குழுவைக் கூட்டுவதற்கும் இங்கு தீர்மானிக்கப்பட்டது. (அ)

# 2025ஆம் ஆண்டில் 340,000 இலங்கையர் வேலைவாய்ப்புக்காக வெளிநாடு செல்வர்

கொழும்பு, பெப். 11

2025 ஆம் ஆண்டில் 340,000 இலங்கையர்கள் வேலைவாய்ப்புக்காக வெளிநாடு செல்வார்கள் என்று இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகம் எதிர்வு கூறியுள்ளது.

உரிமம் பெற்ற வெளிநாட்டு வேலைவாய்ப்பு முகவர்களுக்கான விழிப்புணர்வு நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அதன் தலைவர் கோசல விக்கிரமசிங்க இதனைத் தெரிவித்தார்.

இது தொடர்பில் கருத்து தெரிவித்த பணியகத்தின் பொது முகாமையாளர் டி.டி.பி.சேனாநாயக்க-

2025 ஆம் ஆண்டில் வெளிநாட்டு வேலைகள் ஊடாக 7 பில்லியன் அமெரிக்க டொலர்கள் பணம் அனுப்பப்படும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

2024 ஆம் ஆண்டில், சுமார் 314,000 இலங்கையர்கள் வேலைக்காக வெளிநாடு சென்றுள்ளனர்.

அதன்படி, 2024 ஆம் ஆண்டில் 6.51 பில்லியன் அமெரிக்க டொலர்களை புலம்பெயர்ந்த தொழிலாளர்கள் நாட்டுக்கு அனுப்பியுள்ளனர்.

2024 இல் வெளிநாட்டு வேலைகளுக்குச் சென்ற தொழிலாளர்களில் 65 வீதம் பேர் தொழில்முறை வேலைகளுக்கும் 35 வீதம் பேர் குறைந்தபட்ச தொழில்சார் வேலைகளுக்கும் சென்றனர்.

2025 ஆம் ஆண்டில் 75 வீதமான தொழிலாளர்களை தொழில்சார் வேலைகளுக்கும் 25 வீதமானவர்களை குறைந்தபட்ச தொழில்சார் வேலைகளுக்கும் வழிநடத்த திட்டமிடப்பட்டுள்ளது.

அதன்படி, குவைத்துக்கு 84,000 பேரும், ஐக்கிய அரபு எமிரேட்ஸுக்கு 55,000 பேரும், சவுதி அரேபியாவில் பணியிடங்களுக்கு 52,000 பேரும் அனுப்பப்படுவார்கள் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

மேலும், பணியகம் 15,900 இஸ்ரேலிய வேலைகளையும், ஜப்பானில் 9,000 வேலைகளையும், 8,000 தொழிலாளர்களையும் தென் கொரியாவுக்கு அனுப்ப திட்டமிட்டுள்ளது-என்றார்.

(அ)

# "வைத்தியசாலைகள் நோயாளரை மனரீதியாகக் குணமாக்கும் இடம்"

கொழும்பு, பெப். 11


"மருத்துவமனை கட்டமைப்பை மருத்துவம் மற்றும் சுகாதார சேவைகளுக்கு மட்டும் மட்டுப்படுத்தாமல், நோயாளர்கள் மனரீதியாக குணமடையும் இடமாகவும் மாற்ற வேண்டும்" என சுகாதார மற்றும் ஊடக அமைச்சர் வைத்தியர் நளிந்த ஜயதிஸ்ஸ தெரிவித்தார்.

தான் பிறந்த வைத்தியசாலையான அகலவத்த பிம்புரா மருத்துவமனைக்கு களவிஜயம் மேற்கொண்டிருந்த அமைச்சர் நளிந்த ஜயதிஸ்ஸ, அங்குள்ள அதிகாரிகள் மற்றும் மருத்துவமனை பணியாளர்களைச் சந்தித்துக் கலந்துரையாடிய போதே இவ்வாறு கூறினார்.

(அ)

# மரண அறிவித்தல்

| பிறப்பு | இறப்பு |
| --- | --- |
| 1962 | 2025 |
| 09 | 02 |
| 06 | 09 |



## இராஜநாயகம் பாரதி

### (மூத்த ஊடகவியலாளர் )

திருநெல்வேலியைப் பிறப்பிடமாகவும் கொழும்பையும் திருநெல்வேலியையும் வசிப்பிடமாகவும் கொண்ட சிரேஷ்ட ஊடகவியலாளர் இராஜநாயகம் பாரதி கடந்த சனிக்கிழமை (09.02.2025) அன்று திருநெல்வேலியில் அவர் வாழ்ந்த இல்லத்தில் காலமானார் .

அன்னார் காலஞ்சென்றவர்களான பிரபல கணித ஆசிரியர் சு. இராஜநாயகம் - சிவயோகம் தம்பதியரின் அன்பு மகனும் காலஞ்சென்றவர்களான வடமராட்சி விவாகப் பதிவாளர் சி. தாமோதரம்பிள்ளை - தனலக்ஷ்மி தம்பதியரின் அன்பு மருமகனும் தேவகியின் அன்புக் கணவரும் பார்த்தீபனின் பாசமிகு தந்தையும் அமரர் பரதன் , சுரபி ஆகியோரின் அன்பு சகோதரனும் ப. விநோதினி, க.சிவராசா, சுகந்தி, கௌரி, காலஞ்சென்ற நளினி, பரன், பாமதி, சபேசன், பத்மநிதி, சுபேந்திரன் ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார்

அன்னாரின் புகழுடல் மக்கள் அஞ்சலிக்காக 105/1 பலாலி வீதியில் உள்ள அவரது இல்லத்தில் எதிர்வரும் வியாழக்கிழமை 13. 02. 2025 வரை வைக்கப்படும்.

வியாழன் அன்று காலை 9:00 மணியளவில் அஞ்சலி உரைகள் நிகழ்த்தப்பட்டு 11:00 மணியளவில் ஈமக் கிரிகைகளைத் தொடர்ந்து 1:30 மணியளவில் கொக்குவில் இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

தகவல் :
குடும்பத்தினர்

தொடர்புகளுக்கு :
077 189 4012 (மனைவி)
+44(0)7580763790 (மைத்துநர்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழநாடு
Eelanadu ඊළනාඩු
11.02.2025 செவ்வாய்க்கிழமை
பிலவ வருடம், தை 30

**"ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம்
உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்"**
- யோகர் சுவாமிகள்.

E-mail: eelanaduweekly@gmail.com
தொலைபேசி : 021 205 2300

# தையிட்டி விகாரையை இடிக்க முடியுமா?

தையிட்டி விகாரை கட்டப்பட்டது இப்போது பிரச்னையில்லை - ஆனால், அது தனியார் காணியில் கட்டப்பட்டதுதான் பிரச்னை. எனவே, குறித்த விகாரை அகற்றப்பட வேண்டும். கஜேந்திரகுமார் பொன்னம்பலம் முன்வைத்த விடயத்தை தற்போது அடைக்கலநாதனும் உச்சரித்திருக்கின்றார். ஒரு சிறிய புத்தர் சிலையை அகற்றுவதென்றால் அது வேறு விடயம். மிகவும் பிரமாண்டமாக கட்டப்பட்டிருக்கும் ஒரு விகாரையை எவ்வாறு அகற்றுவது. அது நடைமுறைக்கு சாத்தியமான விடயமா?

இந்தக் கேள்விக்கு அப்பால், குறித்த விகாரை கட்டப்பட்டு அதில் வழிபாடுகளும் இடம்பெற்றுவரும் சூழலில்தான், குறித்த விடயத்தை தமிழ் அரசியல்வாதிகள் கையிலெடுத்திருக்கின்றனர். அந்த விகாரை கட்டப்படும் வரையில் இந்த அரசியல்வாதிகள் என்ன செய்து கொண்டிருந்தனர். உண்மையில் அது ஒரு தனியார் காணி என்றால், அதற்கான உரிய ஆவணங்களுடன் பொலிஸில் முறைப்பாடு செய்து, அதனைத் தொடர்ந்து, நீதித் துறையை நாடியிருக்கலாம். உதாரணமாக கஜேந்திரகுமார் பொன்னம்பலத்திற்கோ அல்லது செல்வம் அடைக்கலநாதனுக்கோ உரித்தான காணியில் விகாரை கட்ட முடியுமா? அவ்வாறு கட்ட முயற்சிக்கும்போது அவர்கள் அமைதியாக இருந்திருப்பார்களா?

தையிட்டி விகாரையின் உரிமையாளர்கள் எதற்காக அமைதியாக இருந்தனர்? இன்று காணியின் உரிமை தொடர்பில் விவாதம் செய்வோர் ஏன் அன்று அமைதியாக இருந்தனர்? அநுரகுமார அரசாங்கத்துக்கு நெருக்கடியை அல்லது தர்மசங்கடத்தை ஏற்படுத்துவதற்கான ஓர் உபாயமாக இந்த விடயத்தை கையிலெடுத்தால், அது மிகவும் சிக்கலான விளைவுகளை ஏற்படுத்தலாம். ஏனெனில், இது அடிப்படையில் ஒரு மத விவகாரம். இலங்கையின் இரண்டாவது அதி உயரமான விகாரையாகக் கணிக்கப்படும் ஒரு விகாரையை இடித்தல் என்பது, இலங்கையின் அனைத்து சாதாரண சிங்கள மக்களையும் தாக்கக்கூடிய ஒரு விவகாரமாக மாறினால் மீண்டும் நாட்டில் இனக் குரோதங்களே மேலோங்கும்.

நிச்சயம் அநுர அரசாங்கம் இந்த விடயத்தில் சமரசம் செய்யப் போவதில்லை. அதேவேளை, தமிழ் மக்கள் மத்தியிலும் இந்த விடயத்துக்குப் பரந்த ஆதரவு கிடைக்கப்போவதில்லை. ஏனெனில், தமிழ் மக்கள் பாரம்பரிய கட்சிகள் தொடர்பில் நம்பிக்கையுடன் இல்லை. அதேவேளை ஒப்பீட்டடிப்படையில் அதிக பாராளுமன்ற உறுப்பினர்களைக் கொண்டிருக்கும் கட்சியான இலங்கை தமிழ் அரசு கட்சி இந்த விடயத்தில் அமைதியாக இருக்கின்றது.

உண்மையில், குறித்த தையிட்டி விகாரைக்கான அடிக்கல் நல்லாட்சி அரசாங்க காலத்தில்தான் இடப்பட்டது. அப்போது தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு அரசாங்கத்துடன் தேனிலவில் இருந்தது. அந்தத் தேனிலவில் தமிழ் அரசு கட்சி, ரெலோ, டி.பி.எல்.எவ். (புளொட்) ஆகியவற்றுக்கு பிரதான பங்குண்டு.

ரணில் விக்கிரமசிங்க ஜனாதிபதியாக பதவி வகித்த காலத்தில்கூட, தமிழ் அரசியல்வாதிகள் இந்த விடயத்தை ஒரு முக்கிய விடயமாக முன்வைக்கவில்லை. குறிப்பாக ஜனநாயக தமிழ்த் தேசியக் கூட்டணியின் பாராளுமன்ற உறுப்பினர்கள் ரணில் விக்கிரமசிங்கவுக்கு ஆதரவு வழங்கியிருந்தனர். பொது வேட்பாளர் விடயத்துக்கு ஆதரவளித்து வந்த நிலையில்கூட, ரணில் விக்கிரமசிங்கவை சந்தித்து உரையாடத் தவறவில்லை. அந்தளவுக்கு ரணிலுடன் அவர்களுக்கு நெருக்கமிருந்தது. ஆனால், இந்த விடயம் தொடர்பில் தவறியும் அவர்கள் ரணிலை நோக்கி விரல் நீட்டவில்லை. அதே வேளை தையிட்டி விகாரைக்கான அடிக்கல் நாட்டப்பட்டபோது, அப்போது, வீடமைப்பு அமைச்சராக அமைச்சராக இருந்த சஜித் தனது தந்தையான ரணசிங்க பிரேமதாஸவின் 94ஆவது பிறந்த தினத்தின் போது, 1,125 விகாரைகள் என்னும் சசுனட்ட அருண (Sasunata Aruna) என்னும் திட்டத்தை அறிவித்தார். அவருக்குத்தான் கடந்த ஜனாதிபதித் தேர்தலில் தமிழ் அரசுக் கட்சி தனது ஆதரவை வழங்கிருந்தது.

இன்றைய சூழலில் தையிட்டி விகாரையை ஓர் அரசியல் உணர்வெழுச்சிக்கான கருவியாகப் பயன்படுத்திக் கொள்ளலாம் என்று தமிழ் அரசியல்வாதிகள் சிலர் எண்ணக்கூடும். ஆனால், அது நிச்சயம் மத ரீதியான குரோதங்களை வளர்க்கவே பயன்படும். ஏனெனில், அதற்கான அடிக்கல் நாட்ட முற்படும் போது, அனைத்துத் தமிழ் அரசியல்வாதிகளும் ஒன்றுபட்டு அதனை எதிர்த்திருக்க வேண்டும் - அவ்வாறில்லாது, தற்போது அதனை இடிக்க வேண்டும் என்று கூறுவதானது வெளியார் மத்தியிலும் மதரீதியான குரோதமாகவே பார்க்கப்படும். ஒரு விகாரையை, ஆலயத்தை இடிக்க வேண்டும் என்று கூறும் விடயத்தை இராஜதந்திர சமூகம் ஒருபோதும் ஆதரிக்காது.

## வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு சீனாவால் உலர் உணவுப்பொதிகள்!



யாழ்ப்பாணம், பெப்.11

சீனாவின் "சகோதர பாசம்" நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் யாழ். மாவட்டத்தில் வெள்ள அனர்த்தத்தால் பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கான நிவாரணப் பொருட்கள், இலங்கைக்கான சீனத் தூதரகத்தின் பிரதிப் பிரதானி சூ யன்வெய்யால் வழங்கப்பட்டன.

யாழ். மாவட்ட செயலக கேட்போர் கூடத்தில் நேற்று நடைபெற்ற இந்த நிகழ்வில் கடற்றொழில் அமைச்சர் இராமலிங்கம் சந்திரசேகர், யாழ். மாவட்ட அரசாங்க அதிபர் மருதலிங்கம் பிரதீபன் மற்றும் சீனத் தூதரகத்தின் உயரதிகாரிகள், பிரதேச செயலாளர்கள் எனப் பலர் கலந்து கொண்டனர்.

இந்த நிகழ்வின்போது 1,070 குடும்பங்களுக்கு தலா 6,490 ரூபாய் பெறுமதியான உலர் உணவுப் பொதிகள் வழங்கப்பட்டன. (எ-05)

## சட்டத்துக்கு புறம்பாக சாராயம் விற்ற பெண் ஒருவர் பொலிஸாரால் கைது!



யாழ்ப்பாணம், பெப்.11

நீண்ட காலமாக சட்டத்துக்குப் புறம்பாக மதுபானம் விற்பனை செய்த பெண்ணொருவர் நேற்றையதினம், 27 கால் போத்தல்கள் சாராயத்துடன் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

யாழ்ப்பாணம் மாவட்ட சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகரின் கீழ் இயங்கும் பொலிஸ் புலனாய்வுப் பிரிவினருக்குக் கிடைத்த இரகசிய தகவலின் அடிப்படையில், யாழ்ப்பாணம் போதைப்பொருள் தடுப்புப் பொலிஸாரால் இந்தக் கைது நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டது.

யாழ்ப்பாணம் - குருநகர் பகுதியைச் சேர்ந்த பெண்ணே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளார். இவர் கால் போத்தல் சாராயம் ஒன்றை ஆயிரம் ரூபாய்க்கு விற்பனை செய்து வந்ததாக பொலிஸாரால் தெரிவிக்கப்படுகிறது. மேலதிக விசாரணைகளின் பின்னர் அவரை நீதிமன்றத்தில் முற்படுத்துவதற்கான நடவடிக்கைகளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (எ-05)

## பஸ்ஸில் கசிப்பு கடத்தியவர் கைது

யாழ்ப்பாணம், பெப்.11

பயணிகள் போக்குவரத்து சேவையில் ஈடுபடும் தனியார் பேருந்து ஒன்றில் கசிப்பு எடுத்து வந்த நபர் ஒருவர் நேற்று முன்தினம் சாவகச்சேரி பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

காரைநகர் பகுதியைச் சேர்ந்த குறித்த நபர் முல்லைத்தீவு பகுதியிலிருந்து 25 லீற்றர் கசிப்பை எடுத்து வந்துள்ளார்.

இதன்போது, சாவகச்சேரி பொலிஸ் நிலைய போதைப் பொருள் மற்றும் சட்டவிரோத செயல்கள் தடுப்புப் பொலிஸாரால் சாவகச்சேரி பொலிஸ் நிலையத்துக்கு முன்னால் பேருந்தினுள் வைத்து குறித்த நபர் கைது செய்யப்பட்டுள்ளார்.

கைது செய்யப்பட்ட நபரிடம் மேலதிக விசாரணைகளை மேற்கொண்ட பின்னர் அவரை சாவகச்சேரி நீதிமன்றத்தில் முற்படுத்துவதற்கான நடவடிக்கைகளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (எ-05)


## நாவலர் அறநெறி பாடசாலைக்கு புதிய மாணவர் அனுமதி!

யாழ்ப்பாணம், பெப்.11

இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களம் நடத்தும் சிறீல சிறீ ஆறுமுக நாவலர் மாதிரி அறநெறிப் பாடசாலையில் புதிதாக இணைய விரும்பும் மாணவர்கள் தங்கள் பதிவுகளை எதிர்வரும் 15. 02. 2025ஆம் திகதியில் இருந்து 15. 03. 2025ஆம் திகதி வரை நாவலர் வீதியில் உள்ள நாவலர் கலாசார மண்டபத்தில் மேற்கொள்ள முடியும்.

மேலதிக தொடர்புக்கு 077 665 0648 என்னும் தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொள்ள முடியுமென இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களப் பணிப்பாளர் யா. அநிருத்தனன் அறிவித்துள்ளார். (எ)

## அப்புக்குட்டி அண்ணையின் 'டவுட்'




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெப்ரவரி - 11 செவ்வாய்கிழமை
குரோதி வருடம் - தை 29
நல்ல நேரம்:7.30 -9.00
ராகு காலம்:3.00 -4.00
திதி :சதுர்த்தசி




**மேடம்**
மகளுக்கு நல்ல வரன் அமையும். எதிர்ப்புகள் அடங்கும். பால்ய நண்பர்கள் உதவுவார்கள். தாய்வழி உறவினர்களுடன் மனஸ்தாபம் வந்து நீங்கும். பழைய கடனைப் பற்றி யோசிப்பீர்கள்.

**இடபம்**
குடும்பத்தினருடன் சுபநிகழ்ச்சிகளில் கலந்துக் கொள்வீர்கள். பூர்வீக சொத்து பிரச்னைக்கு தீர்வு கிடைக்கும். சொந்த பந்தங்களின் சுயரூபத்தை அறிந்து கொள்வீர்கள். நன்மை நடக்கும் நாள்.

**மிதுனம்**
கணவன்-மனைவிக்குள் நெருக்கம் உண்டாகும். எதிர்பாராத இடத்திலிருந்து உதவிகள் கிடைக்கும். விசேஷங்களை முன்னின்று நடத்துவீர்கள். விரும்பிய பொருட்களை வாங்கி மகிழ்வீர்கள்.

**கடகம்**
ராசிக்குள் சந்திரன் இருப்பதால் சில விஷயங்களில் திட்டமிட்டது ஒன்றாகவும் நடப்பது ஒன்றாகவும் இருக்கும். பணப்பற்றாக்குறையால் பிறரிடம் கைமாற்றாக வாங்க வேண்டி வரும்.

**சிம்மம்**
குடும்பத்தினரை அனுசரித்துப் போங்கள். கொஞ்சம் சிக்கனமாக இருங்கள். அண்டை அயலார் சிலரின் செயல்பாடுகளால் கோபம் எரிச்சல் அடையலாம். யாரையும் பகைத்துக் கொள்ளாதீர்கள்.

**கன்னி**
தவறு செய்பவர்களை தட்டிக் கேட்பீர்கள். பெற்றோரின் விருப்பங்களை நிறைவேற்றுவீர்கள். உங்களுடைய எதிர்பார்ப்புகளுக்கு தகுந்தாற் போல் ஒருவர் அறிமுகமாவார்.

**துலாம்**
தன்னம்பிக்கையுடன் பொதுக் காரியங்களில் ஈடுபடுவீர்கள். உறவினர் நண்பர்கள் மத்தியில் அந்தஸ்து உயரும். வீடு வாங்குவது குறித்து யோசிப்பீர்கள். முயற்சிகளில் வெற்றி கிட்டும் நாள்.

**விருட்சிகம்**
பழைய பிரச்னைகளுக்கு தீர்வு காண்பீர்கள். குடும்பத்தில் சந்தோஷம் நிலைக்கும். புதிய நட்பால் உற்சாகமடைவீர்கள். புதிய சிந்தனைகள் பிறக்கும். புது அனுபவம் உண்டாகும்.

**தனுசு**
சந்திராஷ்டமம் இருப்பதால் எடுத்த வேலையை முழுமையாக முடிக்க முடியாமல் அவதிக்குள்ளாவீர்கள். பிள்ளைகளிடம் எதிர்மறையாக பேசாதீர்கள். புது முதலீடுகளை தவிர்க்கவும்.

**மகரம்**
மறைந்து கிடந்த திறமைகள் வெளிப்படும். பிள்ளைகளின் தேவைகளைப் பூர்த்தி செய்வீர்கள். வாகனத்தை சரி செய்வீர்கள். வியாபாரத்தில் வாடிக்கையாளர்களின் எண்ணிக்கை அதிகரிக்கும்.

**கும்பம்**
குடும்பத்தில் உங்கள் வார்த்தைக்கு மதிப்பளிப்பார்கள். பிரபலங்களின் நட்பு கிடைக்கும். அரசால் ஆதாயம் உண்டு. சுப நிகழ்ச்சியில் கலந்துக் கொள்வீர்கள். அதிர்ஷ்டமான நாள்.


**மீனம்**
உறவினர்களின் அன்புத் தொல்லை குறையும். புதிய முயற்சிகள் யாவும் வெற்றியடையும். அக்கம்-பக்கம் வீட்டாரின் ஆதரவு பெருகும். எதிர்பார்த்த இடத்திலிருந்து நல்ல செய்தி வரும்.

# இன்று காண்பிய விரிப்பு காண்கிறது நல்லூரரான் தெற்கு வாசல் வளைவு

யாழ்ப்பாணம், பெப்.11

நல்லூர் கந்தசுவாமி கோவிலின் பெருமையை மேலும் மெருகூட்டும் வகையில் ஆலயத்தின் தெற்கே - கோவில் வீதியில் அமைக்கப்பட்ட அலங்கார தோரண வாசலான "நல்லூரான் தெற்கு வாசல் வளைவு" தைப்பூச நன்நாளில் இன்று செவ்வாய்க் கிழமை தெய்வேந்திர முகூர்த்தமாகிய நண்பகல் 12 மணியளவில் காண்பிய விரிப்பு காணவுள்ளது.

யாழ்ப்பாணத்து கந்தபுராண கலாசாரத்தை எடுத்தியம்புவதாக இந்த வளைவு அமையப் பெற்றுள்ளது. (எ)




# "சரவணப்படலம்" நீர்வேலியில் சிறப்பு சொற்பொழிவு

யாழ்ப்பாணம், பெப்.11

யாழ்ப்பாணம், நீர்வேலி அருள்மிகு கந்தசுவாமி தேவஸ்தானத்தில் நடத்தப்படும் வாராந்தச் சுக்கிரவாரக் கந்த புராண படனத் தொடர் - 13 சொற்பொழிவு ஆலய சண்முக விலாச மண்டபத்தில் எதிர் வரும் 14 ஆம் திகதி வெள்ளிக் கிழமை மாலை 05. 30 மணிக்கு நடைபெறவுள்ளது. சமயஜோதி கதிர்காமன் நிஜலிங்கத்தின் ஒழுங்கமைப்பில் நடைபெறவுள்ள இந்த நிகழ்வில் ஆலய பிரதம குருக்கள் ஸ்கந்தகுரு ஞானபானு, சிவசிறீ இராஜேந்திர சுவாமிநாதக்குருக்களின் ஆசியுரையைத் தொடர்ந்து தலைமையுரையை பரிபாலன சபைத் தலைவர் சி. தயாநாதனும்,

சிறப்புச் சொற் பொழிவை இளஞ்சைவப்புலவர் க. கயிலைவாசன் "சரவணப் படலம்" என்னும் விடயப்பொருளில் நிகழ்த்துவார்.

இதே வேளை, சொற்பொழிவில் இருந்து நீர்வைக் கந்தன் புராண இதிகாசப் பாடசாலை மாண வர்களிடம் வினாக்கள் தொடுக் கப்பட்டுப் பாராட்டுப் பரிசில்கள் வழங்கப்படவுள்ளன.(எ)

# சீனாவின் உதவிகள் தொடர வேண்டும் வடக்கு கடற்றொழிலாளர் எதிர்பார்ப்பு

யாழ்ப்பாணம், பெப்.11

வடமாகாண மீனவ சமூகத்தினருக்கு சீனாவின் உதவிகள் தொடர வேண்டும் என்று கடற்றொழிலாளர்கள் அமைப்பின் பிரதிநிதிகள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

யாழ். மாவட்ட கடற்றொழிலாளர் அமைப்புகளின் பிரதிநிதிகளை நேற்று முன்தினம் இரவு யாழில் உள்ள தனியார் விருந்தினர் விடுதியில் இலங்கைக்கான சீனத் தூதரகத்தின் உதவித் தூதுவர் சந்தித்தார்.



இந்தச் சந்திப்பில் சீனாவால் வடமாகாண மீனவர்களுக்கு வழங்கப்பட்ட வலைகள் மற்றும் உணவுப் பொதிகளுக்கு நன்றி தெரிவிக்கப்பட்டதுடன் தொடர்ந்தும் வடக்கு மாகாண மீனவ சமூகத்தினருக்கு சீனாவின் உதவிகள் கிடைக்க வேண்டும் என்றும் கோரிக்கை முன்வைத்தனர். (எ-05)

# மாணவர்களை வலுவூட்டும் நோக்கில் நல்லூரரில் பசுமை அறிவொளி நிகழ்ச்சி

யாழ்ப்பாணம், பெப்.11

தமிழ்த் தேசிய பசுமை இயக்கம் மாணவர்களுக்கு சூழல் அறிவைப் புகட்டிச் சூழல்

விழிப்புணர்வை ஏற்படுத்துவதன் மூலம் சூழல் பாதுகாப்பில் அவர்களைப் பங்குபற்றுநர்களாக்கும்

நோக்குடனும், அவர்களின் பன்முக ஆளுமையை விருத்தி செய்யும் நோக்குடனும் பசுமை

அறிவொளி என்னும் நிகழ்ச்சித் திட்டத்தை முன்னெடுத்து வருகின்றது. மாணவர்களை

வலுவூட்டுகின்ற இப்பசுமை அறிவொளி நிகழ்ச்சி நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை நல்லூர் திவ்ய ஜீவன சங்க மண்டபத்தில் நடைபெற்றது.

பசுமை இயக்கத்தின் தலைவர் பொ. ஐங்கரநேசன் தலைமையில், "மாணவர்களுக்குச் சமூக விழுமியங்களைப் போதிப்பதில் பெற்றோரின் பங்கு" என்ற கருப்பொருளில் இந்த நிகழ்ச்சிநடைபெற்றது. இதில் "ஆசிரியப் பார்வையில்"



எனும் தலைப்பில் வடக்கு மாகாண ஓய்வுநிலை உதவிக் கல்விப்பணிப்பாளர் கௌரி முகுந்தனும், "உளவளப் பார்வையில்" எனும் தலைப்பில் உளவளத்துணையாளர் ஜீவசர்மிலாவேந்தகுமாரும் வளவாளர்களாகக் கலந்து கொண்டு சிறப்புரைகளை ஆற்றியிருந்தனர்.

இந்த நிகழ்ச்சியில் நூற்றுக்கும் அதிகமான மாணவர்கள் அவர்களின் பெற்றோர்களுடன் கலந்துகொண்டிருந்தனர். நிகழ்ச்சியின் இறுதியில் மாணவர்கள் அனைவருக்கும் சூழல் விழிப்புணர்வுநோக்கில் பிரத்தியேகமாகத் தயாரிக்கப் பட்டிருந்த அப்பியாசக் கொப்பிகள் வழங்கப்பட்டன.(எ - 05)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழநாடு



# மகிந்தவின் நாமத்தை உச்சரித்தே ஆட்சியை தக்கவைக்கிறது அரசு!

## நாமல் ராஜபக்ஷ குற்றச்சாட்டு

கொழும்பு, பெப். 11

**ராஜபக்ஷக்களின் நாமத்தை உச்சரித்தால்தான் தமது இருப்பை தக்கவைத்துக்கொள்ளலாம் என அரசாங்கம் கருதுகின்றது. தலைகீழாக நின்றாலும் மகிந்த ராஜபக்ஷவின் அரசியல் சாதனையை முறியடிக்க முடியாது என்று நாமல் ராஜபக்ஷ தெரிவித்தார்.**

இது தொடர்பில் அவர் மேலும் கூறியவை வருமாறு,

ஆளுங்கட்சியினர் ராஜபக்ஷக்கள், ராஜபக்ஷக்கள் என்றுதான் கூறிவருகின்றனர். ராஜபக்ஷ நாமம் இல்லாமல் அரசாங்கம் செயல்படாது போலும். மகிந்த ராஜபக்ஷவை சூழத்தான் கிராமிய மக்கள் சக்தி உள்ளது என்பது அரசாங்கத்துக்கு தெரியும். அதனால்தான் அவர் இலக்கு வைக்கப்பட்டுள்ளார்.

மதிப்பீட்டு திணைக்களத்தின் மதீப்பீட்டுக்கமையவே வீடுகளை இழந்த அரசியல்வா



திகளுக்கு இழப்பீடு வழங்கப்பட்டுள்ளது.

அந்த இழப்பீட்டு திணைக்களம்தான் மகிந்த ராஜபக்ஷ வாழ்ந்த வீட்டை மதிப்பீடு செய்துள்ளது. மகிந்த வீடு தொடர்பான மதிப்பு சரியென்றும், ஏனையவை அதிகம் என்றும் எப்படி கூறமுடியும்?

சட்டமா அதிபர் விடயத்திலும் இப்படிதான் நடக்கின்றது. ராஜபக்ஷக்களை கைது செய்யுமாறு ஆலோசனை வழங்கினால் சட்டமா அதிபர் நல்லவர், சாட்சி இல்லை எனக் கூறினால் சர்ச்சையை ஏற்படுத்துகின்றனர்-என்றார். (அ)

# ஹொரணையில் போலி கச்சேரி!

கொழும்பு, பெப். 11

ஹொரணை, போருவதன்ட பிரதேசத்தில் இயங்கி வந்த போலி கச்சேரி ஒன்றில் மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பில் போலி ஆவணங்களுடன் தம்பதி ஒன்று கைது செய்யப்பட்டுள்ளதாக கொழும்பு தெற்கு பொலிஸ் குற்றப் புலனாய்வுப் பிரிவினர் தெரிவித்தனர்.

கொழும்பு தெற்கு பொலிஸ் குற்றப் புலனாய்வுப் பிரிவினருக்கு கிடைத்த தகவலின் பேரில் மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பின் போதே சந்தேக நபர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இதன்போது, குறித்த கச்சேரியிலிருந்த பல்வேறு போலி ஆவணங்கள் பொலிஸாரால் கைப்பற்றப்பட்டுள்ளன.

இதனையடுத்து, சந்தேக நபர்களின் வீட்டில் மேற்கொள்ளப்பட்ட சோதனையில், போலியாக தயாரிக்கப்பட்ட 12 வாகன அனுமதிப்பத்திரங்கள், 08 தேசிய அடையாள அட்டைகள், கல்வி சான்றிதழ்கள், முத்திரைகள், மடிக்கணினி, 03 கையடக்கத் தொலைபேசிகள் உள்ளிட்ட பொருட்களும் பொலிஸாரால் கைப்பற்றப்பட்டுள்ளன. (அ)

# நெல்லின் உத்தரவாத விலையை அதிகரிக்காவிட்டால் போராட்டம்

## அரசாங்கத்தை எச்சரிக்கும் விவசாயிகள்

கொழும்பு, பெப். 11

தற்போது அறிவிக்கப்பட்டுள்ள நெல்லுக்கான உத்தரவாத விலையை அதிகரிக்காவிட்டால், அரசுக்கு எதிராகப் போராட்டம் முன்னெடுக்கப்படுமென விவசாயிகள் சங்கங்கள் எச்சரிக்கை விடுத்துள்ளன.

இதற்கிடையில், அதிக விலைக்கு நெல் வாங்குவதற்கு யாருக்கும் வாய்ப்பு கிடைத்தாலும், அரிசியின் விலையை ஒருபோதும் அதிகரிக்க அனுமதிக்க முடியாது என விவசாய பிரதி அமைச்சர் நாமல் கருணாரத்ன தெரிவித்துள்ளார்.

அண்மையில் அரசு நெல்லுக்கான உத்தரவாத விலையை ஒரு கிலோ நாட்டு நெல்லுக்கு ரூ.120, ஒரு கிலோ சம்பா நெல்லுக்கு ரூ.125, மற்றும் ஒரு கிலோ கீரி சம்பா நெல்லுக்கு ரூ.132 என அறிவித்தது. எனினும் உத்தரவாத விலை போதுமானதாக இல்லை என்று விவசாயிகள் சங்கங்களும் விவசாயிகளும் மேலும் குற்றம் சாட்டியுள்ளனர்.

நெல்லுக்கான உத்தரவாத விலை அறிவிக்கப்பட்டதன் மூலம், சில அரசாங்க களஞ்சியங்கள் நெல் கொள்முதல் செய்ய தயாராக உள்ளன. ஆனால் சில நெல் களஞ்சியங்கள் பூட்டப்பட்டிருப்பதையும் காணலாம்.

இதற்கிடையில், பொல்பிதிகம பகுதி விவசாயிகள், அரசாங்க விலையை செலுத்துவதை விட, தனியார் ஆலை உரிமையாளர்களுக்கு நெல் வழங்குவது மிகவும் சாதகமானது என்று கூறுகின்றனர்.

திகாவாபிய மற்றும் அதைச் சுற்றியுள்ள பகுதிகளில் அறுவடை பணிகள் தற்போது இறுதிக் கட்டத்தில் உள்ளன. மேலும் இந்தப் பகுதியில் தற்போதுள்ள ஒரே நெல் களஞ்சியத்தை நெல் சந்தைப்படுத்தல் சபை பல மாதங்களுக்கு கல் ஓயா பெருந்தோட்ட நிறுவனத்திடம் குத்தகைக்கு எடுத்துள்ளது.

தற்போது நெல் களஞ்சியத்தில் சீனி சேமித்து வைக்கப்பட்டுள்ளது. இதன் விளைவாக, விவசாயிகள் தங்கள் அறுவடையை நெல் சந்தைப்படுத்தல் சபைக்கு வழங்க முடிய வில்லை என்று கூறுகின்றனர். (அ)

# கப் வாகனத்தில் கஞ்சா கடத்தி சென்றவர் கைது

கொழும்பு, பெப். 11

அங்குனுகொலபெலஸ்ஸ பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட கொடெல்ல பிரதேசத்தில் கப் வாகனத்தில் கஞ்சா போதைப் பொருளை கடத்திச் சென்ற சந்தேக நபரொருவர் நேற்று கைது செய்யப்பட்டுள்ளதாக அங்குனுகொலபெலஸ்ஸ பொலிஸார் தெரிவித்தனர்.

அங்குனுகொலபெலஸ்ஸ பொலிஸாருக்கு கிடைத்த தகவலின் பேரில் சந்தேகத்திற்கிடமான முறையில் பயணித்த கப் வாகனமொன்றில் மேற்கொள்ளப்பட்ட சோதனையில் சந்தேக நபர் கைது செய்யப்பட்டார்.

கைது செய்யப்பட்ட சந்தேக நபர் இரத்தினபுரி, எம்பிலிப்பிட்டிய பிரதேசத்தில் வசிக்கும் 42 வயதுடையவர் ஆவார்.

சந்தேக நபரிடமிருந்து 23 கிலோ கிராம் கஞ்சா பொலிஸாரால் கைப்பற்றப்பட்டுள்ளது.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளை அங்குனுகொலபெலஸ்ஸ பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

# 45 இலட்சம் ரூபாய் பெறுமதியான சிகரெட்டுகளுடன் வர்த்தகர் கைது

கொழும்பு, பெப். 11

சட்டவிரோதமாக கொண்டுவரப்பட்ட 45 இலட்சம் ரூபா பெறுமதியான வெளிநாட்டு சிகரெட்டுகளுடன் வர்த்தகர் ஒருவர் கட்டுநாயக்க விமான நிலையத்தில் வைத்து விமான நிலைய பொலிஸ் போதைப் பொருள் தடுப்பு பிரிவினரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

கொழும்பு 10, மாளிகாவத்தை பிரதேசத்தைச் சேர்ந்த 24 வயதுடைய வர்த்தகரே கைது செய்யப்பட்டுள்ளார்.


சந்தேக நபரான வர்த்தகர் டுபாயிலிருந்து கட்டுநாயக்க விமான நிலையத்தை வந்தடைந்துள்ளார்.

பின்னர் சந்தேக நபர் விமான நிலையத்தை விட்டு வெளியேற முயன்றபோது பொலிஸ் போதைப்பொருள் தடுப்பு பிரிவினரால் சோதனைக்குட்படுத்தப்பட்டார்.

இதன்போது சந்தேக நபர் கொண்டு வந்த பயணப் பொதியிலிந்து 30 ஆயிரம் வெளிநாட்டு சிகரெட்டுகள் அடங்கிய 150 சிகரெட் காட்டுன்கள் கைப்பற்றப்பட்டன.

இதனையடுத்து, கைது செய்யப்பட்ட சந்தேக நபர் பொலிஸ் பிணையில் விடுவிக்கப்பட்டுள்ளதுடன் எதிர்வரும் 13 ஆம் திகதி நீர்கொழும்பு நீதிமன்றில் ஆஜராகுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. (அ)

# சிகிரியாவுக்கு கிடைத்த அங்கீகாரம்!



2025 ஆம் ஆண்டுக்கான உலகின் மிகவும் வரவேற்கத்தக்க நகரமாக இலங்கையின் சீகிரியா தரப்படுத்தப்பட்டுள்ளது.

இந்த அங்கீகாரம் 360 மில்லியனுக்கும் அதிகமான சரிபார்க்கப்பட்ட வாடிக்கையாளர் மதிப்புரைகளை அடிப்படையாகக் கொண்டது.

இது சிகிரியாவை சூழவுள்ள விருந்தோம்பல் மற்றும் கவர்ச்சியை எடுத்துக்காட்டுகிறது.

இலங்கையின் 'கலாசார முக்கோணத்தின்' மையப்பகுதியில் அமைந்துள்ள சிகிரியா, இயற்கையின் சிறப்பையும் ஆழமான வரலாற்றையும் இணைக்கும் ஒரு கட்டாய சுற்றுலா இடமாகும். (அ)

# சர்வதேச ரீதியில் புகழ்பெற்ற குரங்கு

கொழும்பு, பெப். 11

இலங்கையில் நேற்று முன்தினம் ஒரு குரங்கு நாட்டின் மின்சார விநியோகத்தை முடக்கியதன் மூலம் சர்வதேச தலைப்புச் செய்திகளில் இடம்பிடித்துள்ளது. இந்த சம்பவம் பாணந்துறை உப மின்நிலையத்தில் நிகழ்ந்தது, அங்கு ஒரு குரங்கு மின் கட்டமைப்பில் மோதியதால் நாடு முழுவதும் மின்தடை ஏற்பட்டது.

முற்பகல் 11:30 மணியளவில் இந்த சம்பவம் நிகழ்ந்தது. முதலில் இது ஒரு தொழில்நுட்பக் கோளாறு என்று கருதப்பட்டது, ஆனால் பின்னர் எரிசக்தி அமைச்சர் இது ஒரு குரங்கினால் ஏற்பட்ட சம்பவம் என உறுதிப்படுத்தினார். இந்த சம்பவத்தால் நாடு முழுவதும் மின்சாரம் துண்டிக்கப்பட்டு மக்கள் பலத்த சிரமத்தை அனுபவித்தனர்.

இந்த சம்பவம் அதன் வினோதமான தன்மை காரணமாக உலகளாவிய கவனத்தை ஈர்த்தது. பல சர்வதேச செய்தி நிறுவனங்கள் இந்தச் சம்பவத்தை தங்கள் தலைப்புச் செய்திகளில் இடம்பிடித்துள்ளது. இலங்கையின் மின்சார வழங்கல் முறையின் பலவீனங்கள் மீண்டும் ஒரு முறை வெளிச்சத்துக்கு வந்துள்ளன.

இந்த சம்பவம் குரங்குகள் மற்றும் பிற வனவிலங்குகளின் பாதுகாப்பு குறித்து விழிப்புணர்வை ஏற்படுத்தியுள்ளது. மின்நிலையங்கள் மற்றும் பிற முக்கியமான உள்கட்டமைப்புகளைப் பாதுகாப்பதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும் என்பதற்கு இது ஒரு எச்சரிக்கையாக அமைந்துள்ளது.

இலங்கையின் மின்சாரத் துறை இதுபோன்ற சம்பவங்கள் மீண்டும் நிகழாதவாறு பாதுகாப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ளும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. (அ)

# உயரும் தேங்காய் விலை

கொழும்பு, பெப். 11

ஜனவரி மாதம் இறுதி வாரத்தில் நாட்டில் தேங்காய் ஒன்றின் சில்லறை விலை கடந்த ஆண்டுடன் ஒப்பிடுகையில் 88 வீதத்தால் அதிகரித்துள்ளதாக ஹெக்டர் கொப்பேகடுவ விவசாய ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவனம் தெரிவித்துள்ளது.

தற்போது சந்தையில் பெரிய தேங்காய் ஒன்று 200 -250 ரூபாய் வரை விற்பனை செய்யப்படும் நிலையில் சிறிய தேங்காய் ஒன்று 170 - 190 ரூபாய் வரை விற்பனை செய்யப்படுவதாக விற்பனையாளர்கள் தெரிவிக்கின்றனர்.

2024 ஜனவரி மாதம் இறுதி வாரத்துடன் ஒப்பிடுகையில் பெரிய தேங்காய் ஒன்றின் சில்லறை விலை 78 வீதத்தாலும் சிறிய தேங்காய் ஒன்றின் சில்லறை விலை 88 வீதத்தால் அதிகரித்துள்ளதை ஹெக்டர் கொப்பேகடுவ விவசாய ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவனம் வெளியிட்டுள்ள அறிக்கை சுட்டிக்காட்டுகிறது. (அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## முன்னாள் எம்.பிக்கள் நட்டஈட்டை பெற்ற விதம் குறித்து விசாரணை

கொழும்பு, பெப். 11

அறகலயவின்போது ஏற்பட்ட இழப்புகளுக்காக இழப்பீடு பெற்றுக்கொண்டுள்ள பாராளுமன்ற உறுப்பினர்கள் தொடர்பில் விசாரணை நடத்துவது தொடர்பில் அரசாங்கம் ஆராய்ந்துவருகின்றது என தெரியவருகின்றது.

அரசாங்க அதிகாரிகளுக்கு அழுத்தம் கொடுத்து, போலியான தகவல்களையும் உள்ளடக்கிச் சிலர் கூடுதலான இழப்பீட்டை பெற்றுக்கொண்டுள்ளனர் என்ற குற்றச்சாட்டு எழுந்துள்ளது. மேலும் இழர் காப்புறுதி நிறுவனங்களிடமும் இழப்பீடு பெற்றுள்ளனர் எனக் கூறப்படு கின்றது.

எனவே, இழப்பீடு முறையாக பெறப்பட்டுள்ளதா என்பது பற்றியும், முறைகேடு இடம்பெற்றிருந்தால் மேலதிகமாக பெற்றுள்ள தொகையை மீளப்பெறுவதற்கான இயலுமை பற்றியும் ஆராயப்பட்டு வருகின்றது என தெரியவருகின்றது. (அ)

## மாணவர்களை இலக்கு வைத்து போதைமாத்திரைகள் விற்பனை

கொழும்பு, பெப். 10

மதவாச்சி பொலிஸ் பிரிவுக்குட்பட்ட கெப்பித்திகொல்லாவ பகுதியில் பொலிஸாரினால் மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பின்போது, கஞ்சா கலந்த மதன மோதகம், போதை மாத்திரைகளை விற்பனை செய்த சந்தேக நபர்கள் இருவர் கைது செய்யப்பட்டனர்.

குறித்த கைது நடவடிக்கை நேற்று முன் தினம் ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்றுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

கைது செய்யப்பட்ட சந்தேக நபர்கள் 19 மற்றும் 36 வயதுடைய அடவீரகொல்லேவ மற்றும் கிரிப்பன்வெவ பகுதிகளைச் சேர்ந்தவர்களாவர். சந்தேகநபர்களிடமிருந்து 1,369 போதை மாத்திரைகளை கைப்பற்றப்பட்டன.

பொலிஸார் மேற்கொண்ட விசாரணையில், பாடசாலை மாணவர்களை இலக்குவைத்து போதை மாத்திரைகள் விற்பனை முன்னெடுக்கப்பட்டுள்ளதாக தெரியவந்துள்ளது. (அ)

## வேகமாகக் குறைவடைந்துவரும் முட்டை, கோழி இறைச்சி விலை!

கொழும்பு, பெப். 11

சந்தையில் முட்டை மற்றும் கோழி இறைச்சியின் விலைகள் வேகமாகக் குறைந்துள்ளதாக அகில இலங்கை கோழிப்பண்ணை வியாபாரிகள் சங்கத்தின் தலைவர் மாதலி ஜெயசேகர தெரிவித்துள்ளார்.

இதன்படி முட்டையொன்று 25 முதல் 28 ரூபாய் வரையில் விற்கப்படுவதாக அவர் சுட்டிக்காட்டினார்.

மேலும் சிறப்பு அங்காடிகளில் உறைந்த கோழி இறைச்சி 750 ரூபாவுக்கும், தோல் நீக்கப்பட்ட கோழி இறைச்சி 1,100 முதல் 1,000 ரூபாய் வரையிலும் விற்கப்படு வதாகவும் அகில இலங்கை கோழிப்பண்ணை வியாபாரிகள் சங்கத்தின் தலைவர் மாதலி ஜெயசேகர குறிப்பிட்டார். (அ)

# 43 எம்.பிக்களுக்கு 122 கோடி ரூபா இழப்பீடு பதவியை தக்கவைக்க ரணிலின் இலஞ்சம்!

### நளிந்த ஜயதிஸ்ஸ குற்றச்சாட்டு

கொழும்பு, பெப். 11

ஆட்சியாளர்கள் தமது கட்சியின் ஆதரவாளர்களை பேரவாவியில் மூழ்கடிக்க செய்து விட்டு தாம் நட்டயீட்டு சமுத்திரத்தில் நன்றாக நீந்தி குளித்துள்ளனர். நபர் ஒருவருக்கு இழப்பீட்டு தொகையாக 25 இலட்சம் ரூபாவையே பெற்றுக்கொள்ள முடியும். இருப்பினும் 43 பாராளுமன்ற உறுப்பினர்கள் 5 இலட்சம் முதல் 980 இலட்சம் வரை நட்டஈட்டை பெற்றுக்கொண்டுள்ளனர். ரணில் விக்கிமரசிங்க தனது பதவியை தக்க வைத்துக் கொள்வதற்காக தன்னுடன் இருந்தவர்களுக்கு அரச திறைசேரியிலிருந்து பெற்றுக்கொடுத்த இலஞ்சமாகவே இதனைப் பார்க்கவேண்டியுள்ளது என சுகாதார மற்றும் வெகுசன ஊடகத்துறை நளிந்த ஜயதிஸ்ஸ தெரிவித்துள்ளார்.

பேராதனையில் இடம்பெற்ற நிகழ்வொன்றின் பின்னர் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும் போதே அமைச்சர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-நட்டஈடு வழங்கப்பட்ட காலப்பகுதியில் அந்த பகுதிக்குரிய பிரதேச செயலாளர்கள், மதீப்பிட்டாளர்கள் பாராளுமன்றத்துக்கு அழைக்கப்பட்டுள்ளனர்.

அப்போதைய ஆளுங்கட்சியின் பிரதம கொரடாவாக இருந்த பிரசன்ன ரணதுங்கவினால் கடிதம் அனுப்பட்டு பாராளுமன்றத்துக்கு அவர்கள் அழைக்கப்பட்டிருந்தனர்.

அங்கு சென்றிருந்த அதிகாரிகள் அப்போது ஊடகங்களுக்கு கருத்து தெரிவித்திருந்ததுடன் அவர்களுக்கு அந்தக் காலப்பகுதியில் அதிகமாக மதிப்பீடு செய்யுமாறு அழுத்தம் பிரயோகிக்கப்பட்டுள்ளது.



எமது நாட்டில் பேரிடர் ஒன்று ஏற்படுமனால் ஒரு நபருக்கு அதிகபட்சமாக 25 இலட்சம் ரூபாவையே வழங்க முடியும். உண்மையில் அந்த தொகை கிடைப்பதில் சிரமம் உள்ளது.

ஆனால் அந்த காலப்பகுதியில் முறையாக நட்டஈட்டை பெற்றுக்கொள்வதில் முறைமை ஒன்று இருக்கவில்லை. ஆனால் ரணில் விக்கிரமசிங்க சட்டத்திட்டங்களை மாற்றி தேவையான வகையில் நட்டஈட்டை பெற்றுக்கொள்வதற்கான முறைமை உருவாக்கியுள்ளார்.

இங்கு சில பிரச்னைகள் உள்ளன. 43 பாராளுமன்ற உறுப்பினர்கள் 5 இலட்சம் முதல் 980 இலட்சம் வரை நட்டஈட்டை பெற்றுக்கொண்டுள்ளனர்.

இவர்கள் நட்டயீட்டை மாத்திரம் அல்ல. சில நிறுவனங்களிடமிருந்து காப்புறுதிகளையும் பெற்றுக்கொண்டுள்ளனர். நாம் வெளியிட்ட பெயர் பட்டியிலிருந்து யார் காப்புறுதிகளை பெற்றுக்கொண்டுள்ளனர் என்பதை காப்புறுதி நிறுவனங்கள் நாட்டு மக்களுக்கு அறிவிக்கவேண்டும். அடுத்ததாக அவர்களது அசையும் அசையாத சொத்துக்கள் 800 900 இலட்சமாக இருந்தால் அவர்களது சொத்துக்கள் தொடர்பிலான அறிக்கைகளை பாராளுமன்றத்துக்கு சமர்ப்பிக்க வேண்டும்.

அதிக நட்டஈட்டை பெற்றுக்கொள்வதற்காக சிலர் தமது வீட்டில் நகைகள் இரத்தினக்கற்கள் இருந்தாக தெரிவித்துள்ளனர். நட்டஈட்டைப் பெற்றுக்கொண்டவர்களின் பிரதேசங்களில் உள்ள மக்கள் எம்மை அழைத்து அவ்வாறான சேதங்கள் எதுவும் இடம்பெறவில்லை எனக் கூறுகிறார்கள்.

இரண்டு ஜன்னல்கள் மாத்திரமே சேதமடைந்திருந்தாக கூறுகின்றனர். ஆனால் இவர்கள் எவ்வாறு இந்தளவு நிதியை பெற்றுக்கொண்டனர்? அவர்கள் தமது கட்சியின் ஆதரவாளர்களை பேரவாவியில் முழ்கடிக்கச்செய்து விட்டு தாம் நட்டஈட்டு சமுத்திரத்தில் நன்றாக நீந்தி குளித்துள்ளனர். இதுவே தற்போது புலப்படுகிறது.

எனவே இது தொடர்பில் நாம் விசாரணைகளை முன்னெடுப்போம். இந்த நட்டஈடு மதிப்பீடு செய்யப்பட்ட விதம் தொடர்பிலும் விசாரணைகள் முன்னெடுக்கப்படவுள்ளன.

தமக்கு வழங்கப்பட்ட நட்டஈடு போதாது என ஒருவர் கூறுவதை பார்த்தேன்.

இவர்கள் எவ்வாறு இவ்வளவு சொத்துக் களை கொண்டிருந்தார்கள் என்பது தொடர்பில் இலஞ்ச ஊழல் ஆணைக்குழு விசார ணைகளை முன்னெடுக்கும்-என்றார். (அ)

## அரசியல் தூய்மையை உறுதி செய்ய அரசமைப்புத் திருத்தங்கள் அவசியம்

கொழும்பு, பெப். 11

அரசியல் தூய்மையை உறுதி செய்வதற்கு அரசியலமைப்பு திருத்தங்கள் அவசியம் எனவும்,

அதற்கு அரசாங்கம் தயாராக இருப்பதாகவும் சுகாதார மற்றும் வெகுசன ஊடக அமைச்சர் நளிந்த ஜயதிஸ்ஸ தெரிவித்தார்.

கிளீன் சிறிலங்கா தேசிய வேலைத்திட்டத்தின் கீழ் களுத்துறையில் நேற்று முன் தினம் இடம்பெற்ற நிகழ்வில் கலந்துகொண்டு கருத்துரைக்கும் போது அவர் இதனைக் குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-அரசியல் தூய்மைப்படுத்தல் நடவடிக்கையினையும் நாம் முன்னெடுத்து வருகின்றோம்.

அரசியலில் காணப்படும் சில கழிவுகளை வெளிப்படுத்த வேண்டும்.

ஊழலில் ஈடுபட்டவர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கையினை முன்னெடுக்க வேண் டியுள்ளது.

அதற்கான நடவடிக்கைகள் கிரமமான முறையில் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

அத்துடன், அரசியல் தூய்மையை உறுதி செய்வதற்குச் சட்ட நடவடிக்கைகள் அவசியமாயின் அரசியலமைப்பில் திருத்தங்களை மேற்கொள்வதற்கும் அரசாங்கம் தயாராக உள்ளது-என்றார். (அ)

## அடுத்த சில நாட்களுக்கு குறுகியகால மின்வெட்டு?

கொழும்பு, பெப். 11

நுரைச்சோலை நிலக்கரி அனல் மின் நிலையத்தில் நேற்று முன் தினம் ஏற்பட்ட கோளாறு காரணமாக,

அடுத்த சில நாட்களுக்கு ஒரு குறுகிய மின் தடை ஏற்படக்கூடும் என்று இலங்கை மின்சார சபையின் உள்ளக தகவல்கள் தெரிவிக்கின்றன. மின்வெட்டு குறித்து எரிசக்தி அமைச்சு இதுவரை உத்தி யோகபூர்வ அறிவிப்பை வெளியிடவில்லை.

மேலும் எந்தவித தடைகளும் இன்றி மின்சாரத்தை வழங்க சுமார் ஒரு வாரம் ஆகும் எனத் தெரிவிக்கப்படுகிறது. ஒரு நாளுக்கு 15 அல்லது 20 நிமிடங்கள் வரை மின் வெட்டு ஏற்படலாம் எனத் தெரிவிக்கப்படுகிறது.

தற்போதைய சூழ்நிலை காரணமாக, மின்சாரத்தை சிக்கனமாகப் பயன்படுத்துமாறு மின்சார சபையின் உயர் மட்டத்திலிருந்து அறிவுறுத்தல்கள் பெறப்பட்டுள்ளதாகவும் தகவல்கள் கூறுகின்றன. (அ)

## வைபவரீதியாக ஆரம்பமான புதிய சுற்றுலா ரயில் சேவை!

கொழும்பு, பெப். 11

நானுஓயா மற்றும் பதுளை ரயில் நிலையங்களுக்கு இடையிலான எல்ல ஒடிஸி நானுஓயா என்ற புதிய சுற்றுலா ரயில் சேவை நேற்று வைபவரீதியாக ஆரம்பித்து வைக்கப்பட்டது.

நானுஓயா ரயில் நிலையத்தில் இடம்பெற்ற இந்த நிகழ்வில் கலந்துகொண்டு ரயில்வே பொது முகாமையாளர் தம் மிக்க ஜயசுந்தர, குறித்த ரயில் சேவையை ஆரம் பித்து வைத் துள்ளார்.

இந்த ரயில் செவ்வாய்க்கிழமைகளை தவிர ஒவ்வொரு வார நாட்களிலும் 14 பெட்டிகளுடன் இயக்கப்படும் என ரயில் திணைக்களம் தெரிவித்துள்ளது.

குறித்த தினங்களில் காலை 8:15 மணிக்கு நானுஓயாவிலிருந்து பதுளைக்கும், பிற்பகல் ஒரு மணிக்கு பதுளையிலிருந்து நானுஓயாவுக்கு இந்த ரயில் சேவை இடம்பெறும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ)

## கட்டுநாயக்க விமான நிலையத்தின் வருகை முனையத்தில் தோட்டா மீட்பு!

கொழும்பு, எப். 11

கட்டுநாயக்க விமான நிலைய வருகை முனையத்திலிருந்து நேற்று திங்கட்கிழமை அதிகாலை 09 மில்லிமீற்றர் நீளமுடைய தோட்டா ஒன்று கைப்பற்றப்பட்டுள்ளதாக கட்டுநாயக்க விமான நிலைய பொலிஸார் தெரிவித்தனர்.

விமான நிலைய பணிப்பெண் ஒருவர் நேற்று அதிகாலை 03.15 மணியளவில் விமான நிலைய வருகை முனையத்தில் தோட்டா ஒன்று கிடப்பதை கண்டு,

அதனை உடன டியாக கட்டுநாயக்க விமான நிலைய பொலிஸாரிடம் ஒப்படைத்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

கைப்பற்றப்பட்ட தோட்டாவை மேலதிக விசாரணைகளுக்காக அரசாங்க இரசாயன பகுப்பாய்வாளர் திணைக்களத்திடம் ஒப்படைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும் பொலிஸார் கூறினர்.

இது தொடர்பில் கட்டுநாயக்க விமான நிலைய பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர். (அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தேசிய மின் அமைப்பின் சமநிலை பேண கடந்த காலங்களில் எந்த திட்டமுமில்லை

## மின்சக்தி அமைச்சர் குமார ஜயக்கொடி

கொழும்பு, பெப். 11

**தேசிய மின்சார அமைப்பின் சமநிலையைப் பேணுவதற்கு கடந்த காலங்களில் எந்தவொரு திட்டமும் செயல்படுத்தப் பட வில்லை என மின்சக்தி அமைச்சர் குமார ஜயக்கொடி தெரி வித்துள்ளார்.**

முந்தைய அரசாங்கங்களின் திட்டமிடப்படாத மற்றும் குறுகிய பார்வை கொண்ட கொள்கைகளே மின் தடைக்கு வழிவகுத்ததாக அறிக்கை ஒன்றை வெளியிட்டு அவர் தெரிவித்துள்ளார்.

அந்த அறிக்கையில் அவர் மேலும் தெரிவிக்கையில்- தேசிய மின் கட்டமைப்பின் ஸ்திரத்தன்மையைப் பராம ரிப்பதில் உரிய கவனம் செலுத் தத் தவறிய முந்தைய அரசாங் கங்களின் குறுகிய பார்வை கொண்ட செயல்களாலும், தொழில்நுட்பத்தைப் பற்றிய புரிதல் இல்லாத மோசமான வழிகாட்டுதலாலும் இந்த நிலைமை ஏற்பட்டதாக ஆரம்ப கட்ட விசாரணைகள் மூலம் தெரியவந்துள்ளன.

இருப்பினும், இந்த நிலை மைக்குப் பின்னால் உள்ள கார ணங்களை நாங்கள் முழுமை யாக ஆராய்ந்து,

இது மீண்டும் நிகழாமல் தடுக்க தேவையான நடவடிக்கைகளை எடுப்போம்.

மின் விநியோகத் தடையால் பெரிதும் இன்னல்களுக்கு முகங்கொடுத்த மக்களுக்கு எமது வருத்தத்தை தெரிவித்துக் கொள்கிறோம்.

மேலும் மின்சார அமைப்பை மீட்டெடுப்பதில் கடினமாக உழைத்து எங்களுக்கு ஆதரவ ளித்த அனைவருக்கும் நன்றி- என்றார். (அ)

## மாணவர்களுக்கு செயல் முறை பயிற்சி



கற்பிட்டி, பெப்.11

மெல்ல கற்கும் மாணவர் களின் ஆற்றல் ஆளுமைகளை வெளிக்கொண்டு வருவதற்கான செயல் முறைப் பயிற்சி கற் பிட்டி செடோ நெனசல காரி யாலயத்தில் நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை நடை பெற்றது.

இந்தச் செயல் முறை பயிற்சி, கற்பிட்டி செடோ நெனசல முகாமையாளர் மற் றும் பயிற்றுவிப்பாளர் ஆகி யோரின் மேற்பார்வையில் நடைபெற்றது. (எ)

# அரசியல் பழிவாங்கலுக்காக நிரபராதிகளை தண்டிக்காதீர்!

## ஜானக வக்கம்புர கோரிக்கை

கொழும்பு, பெப். 11

லசந்த விக்கிரமதுங்கவை கொலை செய்தவர்கள் யார் என்பதை இனங்கண்டு அவர் களுக்கு தண்டனை வழங்கு வதை விடுத்து, ஒரு சிலரை முன்னிலைப்படுத்தி ஏனை யோர் மீது குற்றஞ்சாட்டுவதை நிறுத்தவேண்டும் என முன் னாள் பாராளுமன்ற உறுப்பினர் ஜானக வக்கம்புர தெரிவித்தார்.

அவர் மேலும் குறிப்பிடு கையில்-லசந்த விக்கிரமதுங்க படுகொலை தொடர்பில் அன்று வீதியிலிருந்து கூச்ச லிட்டவர்களுக்கு இன்று அதிகாரம் இருக்கிறது. எனவே அந்தக் கொலையுடன் தொடர்புடையவர்களுக்கு தண்டனை வழங்கவேண்டியது தற்போதைய அரசாங்கத்தின் பொறுப்பாகும்.

லசந்த விக்கிரமதுங்கவை கொலை செய்தவர்கள் யார் என்பதை இனங்கண்டு அவர் களுக்கு தண்டனை வழங்கு வதை விடுத்து, ஒரு சிலரை முன்னிலைப்படுத்தி ஏனை யோர் மீது குற்றஞ்சாட்டுவதை நிறுத்தவேண்டும்.

எமது ஆட்சிக் காலத்தில் சட்டமா அதிபரிடம் ஏதேனும் விளக்கம் கோரினால் நீதித் துறை மீது அச்சுறுத்தல் விடுப்பதாக இவர்கள் கடுமை யாக விமர்சித்தனர்.

ஆனால் தற்போதைய ஜனா திபதி பகிரங்கமாக சட்டமா அதிபரை அச்சுறுத்தும்போது அமைதியாக இருக்கின்றனர். மூன்றில் இரண்டு பெரும்பான் மையை உபயோகித்து கொலைக் குற்றங்களுடன் தொடர்புடையவர்களுக்கு தண்டனை வழங்குமாறும் வலியுறுத்துகின்றோம்.

ஊழல் மோசடியாளர்கள், கொலைக் குற்றங்களுடன் தொடர்புடையவர்கள் பாதுகாக்கப்படவேண்டும் என ஒருபோதும் நாம் கூறப் போவதில்லை.

ஆனால் உண்மையான குற்றவாளிகள் தண்டிக்கப் படவேண்டும்.

அதனை விடுத்து அரசியல் பழிவாங்க லுக்காக நிரபராதிகள் தண்டிக் கப்படக்கூடாது.

தற்போது அரசாங்கத்துக்கு எதிராக உண்மைகளை வெளிப் படுத்தும்போது அவற்றை மறைப்பதற்கு பாராளுமன்றத் தில் வேறு விடயங்களை முன்வைப்பதை வழக்கமாகக் கொண்டுள்ளனர்.

நெல் பிரச்னையை திசை திருப்புவதற்கு முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ வின் இல்லம் தொடர்பில் பாரிய பிரசாரங்களை முன்னெ டுத்தனர். தற்போது இழப்பீடு களைப் பெற்றுக் கொண்டவர் களது பட்டியலை வெளியிட்டு அதனை பேசு பொருளாக்கி யுள்ளனர்-என்றார். (அ)

# மொத்த மின்சார உற்பத்தியில் பெரும் வீதம் ஒப்பீட்டளவில் சூரிய சக்தியிலிருந்து உற்பத்தி

## மின்சார சபை பொறியாளர்கள் சங்கம் அறிவிப்பு

கொழும்பு, பெப். 11

மொத்த மின்சார உற்பத்தி யில் பெரும் சதவீதம் ஒப்பீட் டளவில் நிலையற்ற சூரிய சக் தியிலிருந்து உற்பத்தி செய்யப் படுவது முழு மின்சாரக் கட்டமைப்பின் வீழ்ச்சிக்கான முதன்மைக் காரணம் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

நேற்று முன் தினம் ஞாயிற் றுக்கிழமை என்பதால் மின்சார தேவை குறைவாக இருப்பதும், மொத்த மின்சார உற்பத்தியில் பெரும் வீதம் ஒப்பீட்டளவில் நிலையற்ற சூரிய சக்தியிலிருந்து உற்பத்தி செய்யப்படுவதும் முழு மின்சார கட்டமைப்பின் வீழ்ச்சிக்கான முதன்மைக் கார ணம் என இலங்கை மின்சார சபையின் பொறியாளர்கள் சங்கம் தெரிவித்துள்ளது.

இருப்பினும், இந்த நிலை மையை முறையான விசாரணை மூலம் உறுதிப்படுத்த வேண் டும் என சங்கம் சுட்டிக்காட்டி யுள்ளது.

பாணந்துறை உப மின் கட் டமைப்பில் 33 கே.வி அருகே ஏற்பட்ட திடீர் மின் தடை யுடன் குறைந்த மின்சார தேவை மற்றும் அதிக சூரிய மின் உற்பத்தி காரணமாக நிலையற் றதாக இருந்த தேசிய மின்சார அமைப்பு சமநிலையற்றதாக மாறியது.

தானியங்கி அவசரகால செயலிழப்பு முகாமைத்துவ செயன்முறையால் அமைப்பை மீட்டெடுக்க முடியவில்லை இதன் விளைவாக நாடு முழுவ தும் மின் தடை ஏற்பட்டது.

முந்தைய பல ஞாயிற்றுக்கி ழமைகளில் தேசிய மின்சார அமைப்பு இது போன்ற ஆபத்தான சூழ்நிலையை எதிர்நோக்கி இருந்தபோதிலும், மின்சார சபை அமைப்பு கட்டுப்பாட்டுப் பிரிவின் திறமையால் முழுமையான மின்வெட்டு தடுக்கப்பட்டதா கவும் சங்கம் குறிப்பிட்டுள்ளது.

இருப்பினும், தேசிய மின் சார அமைப்பின் மோசமான நிலை காரணமாக மின்தடையை தடுத்திருக்க முடியாது என அனுமானித்தாகவும் தெரிவிக் கப்பட்டுள்ளது.

எதிர்காலத்தில் இதுபோன்ற மின்வெட்டு ஏற்படாமல் தடுக்க தேவையான நடவடிக் கைகளை எடுக்க, மின்கல சேமிப்பு வசதிகள் மற்றும் பம்ப் சேமிப்பு நிலையங்கள் தொடர் பான திட்டங்களை விரைவு படுத்த இலங்கை மின்சார சபையும் எரிசக்தி அமைச்சும் ஏற்கனவே இணைந்து செயல் பட்டு வருவதாக இலங்கை மின்சார சபையின் பொறியா ளர்கள் சங்கம் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட் டுள்ளது.

இலங்கை மின்சார சபையின் அமைப்பு கட்டுப்பாட்டுப் பிரிவு மற்றும் ஏனைய பிரிவின ரும் முழு மின்சார அமைப்பை யும் விரைவாக மீட்டெடுக்க விடாமுயற்சியுடன் செயல் பட்டு வருகின்றன.

மேலும் சில தரப்பினர் இது தொடர்பாக சில உண்மைக்கு புறம்பான கருத்துக்களைப் பரப்ப முயற்சிப்பதை அவதா னிக்க முடிவதாகவும் இலங்கை மின்சார சபையின் பொறியா ளர்கள் சங்கம் மேலும் சுட்டிக் காட்டியுள்ளது. (அ)

# ஹிருணிகாவுக்கு பிடியாணை!

கொழும்பு, பெப். 11

2022 ஆம் ஆண்டு கறு வாத்தோட்டம் பொலிஸ் பிரி வில் நடத்தப்பட்ட போராட் டம் தொடர்பான முறைப்பாடு விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டபோது நீதிமன்றத்தில் ஆஜராகாத ஹிருணிகா பிரேமச்சந்திர உட்பட சந்தேக நபர்களைக் கைது செய்து ஆஜர்படுத்த கொழும்பு நீதவான் நீதிமன்றம் நேற்று பிடியாணை பிறப்பித்துள்ளது.

குறித்த முறைப்பாடு நேற்று கொழும்பு தலைமை நீதவான் தனுஜா லக்மாலி முன்னிலை யில் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்ட நிலையில் இந்த பிடியாணை பிறப்பிக் கப்பட்டுள்ளது.

இதேவேளை அந்த நேரத் தில், சந்தேக நபர்களாக பெய ரிடப்பட்ட ஹிருணிகா பிரே மச்சந்திர உட்பட பலர் நீதிமன் றத்தில் ஆஜராகவில்லை என்ப தும் குறிப்பிடத்தக்கது. (அ)

## பொலிஸ் அதிகாரிகளுக்கு இடமாற்றம்!

கொழும்பு, பெப். 11

குற்றப் புலனாய்வுத் திணைக்களம் மற்றும் நிதிக் குற்றப் புலனாய்வுப் பிரிவு ஆகியவற்றுக்கு பொறுப்பான சிரேஷ்ட பிரதிப் பொலிஸ்மா அதிபராக அசங்க கரவிட்ட நியமிக்கப்பட்டுள்ளார்.

இந்த நியமனம் பெப்ரவரி 12 ஆம் திகதி முதல் அமுலுக்கு வரும் என பொலிஸ் ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.

இதேவேளை, மேல் மாகாண (வடக்கு) பொறுப்பதிகாரியாக பிரதி பொலிஸ் மா அதிபர் பி.லியனகே நியமிக்கப்பட் டுள்ளார். பிரதிப் பொலிஸ் மா அதிபர் எம்.டி.பி.தயாரத்ன நிதிக் குற்றப் புலனாய்வுப் பிரி வுக்கு மாற்றப்பட்டுள் ளார். தேசிய பொலிஸ் ஆணைக் குழு வின் அங்கீகாரத்துடன் இந்த இட மாற்றங்கள் வழங் கப் பட்டுள்ளன. (அ)

# வகுப்பொன்றில் மாணவர்கள் தொகையை 35 ஆக குறைக்கும் திட்டம் பரிசீலனையில்!

கொழும்பு, பெப். 11

ஒரு வகுப்பில் மாணவர் களின் எண்ணிக்கையை 35 இற்கும் குறைவாக வைத்தி ருக்கும் யோசனையை பரிசீ லித்து வருவதாக பிரதமர் கலாநிதி ஹரிணி அமரசூரிய ஆசிரியர் மற்றும் அதிபர்கள் சங்கத்துக்கு அறிவித்துள்ளார்.

கல்வித்துறையில் ஏற்பட் டுள்ள பிரச்னைகள் தொடர்பில் தொழிற்சங்க ஒன்றியத்துக்கும் பிரதமருக்கும் இடையில் இடம்பெற்ற கலந்துரையா டலின் போதே பிரதமர் இந்த அறிவித்தலை விடுத்துள்ளார்.

இக்கலந்துரையாடலில் கொழும்பு பிராந்தியத்தில் உள்ள பாடசாலைகளில் மாணவர்களின் எண்ணிக்கை குறைவடைந்தமை தொடர்பான தகவல்களை முன்வைத்து இலங்கை ஆசிரி யர் சங்கத்தின் பொதுச் செய லாளர் ஜோசப் ஸ்டாலின் அரச பாடசாலைகளில் மாணவர் சேர்க்கை படிப்படியாக குறைந்து வருவது தொடர்பான உண்மைகளை தெரிவித்துள் ளார்.

பாடசாலைகளில் மாண வர்களின் எண்ணிக்கை இவ் வாறான நிலையில் இருந்தால், பிரபல பாடசாலைகள் மற்றும் தனியார் பாடசாலைகளில் சேரும் மாணவர்களின் எண் ணிக்கை மட்டுப்படுத்தப் படா விட்டால், மாணவர்கள் குறை வாக உள்ள பாடசாலை கள் மூடப்படுவதை தவிர்க்க முடி யாது எனவும் இதன்போது அவர் சுட்டிக்காட்டியிருந்தார். (அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆக்கிரமிக்கப்பட்ட மக்களின் நிலங்களை மீட்க நடவடிக்கை




திருகோணமலை, பெப்.11

**திருகோணமலை மாவட்டத்தில் இடம்பெறும் நில அபகரிப்புக்கள் தொடர்பாகவும், அபகரிப்புக்களை தடுப்பதற்காகவும் இழந்த நிலங்களை மீளப்பெறுவதற்கான சட்ட முன்னெடுப்புக்களை ஏற்படுத்தி நிலங்களை மீளப்பெற்றுக் கொள்வதற்காக வலையமைப்பாக இணைந்து செயல்படுவதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.**

நில மீட்புக்கான வலையமைப்பு கலந்துரையாடல் திருகோணமலை நகர சபை மண்டபத்தில் நேற்றையதினம் காலை நடைபெற்றது.

இந்தக் கலந்துரையாடலில் நில உரிமை மறுக்கப்பட்ட மக்கள், சிவில் அமைப்புக்களின் பிரதிநிதிகள்,

அரச சார்பற்ற நிறுவனங்களின் பிரதிநிதிகள், ஊடகவியலாளர்கள் மற்றும் இளைஞர்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர்.

அகம் மனிதாபிமான வள நிலையம் மற்றும் சூழலியல் நீதிக்கான மக்கள் கூடல் நிறுவனங்கள் இணைந்து இந்த நில மீட்புக்கான செயல்திட்டத்தை ஆரம்பித்துள்ளன.

இந்தக் கலந்துரையாடலில் கலந்து கொண்டோரால் திருகோணமலை மாவட்டத்தில் இடம்பெற்றுவரும் நில உரிமை மீறல் தொடர்பாக பல கருத்துக்கள் முன்வைக்கப்பட்டதுடன், இதற்கு தீர்வு காணும் செயல் திட்டங்களையும் இன்போது உருவாக்கிக் கொண்டனர்.(எ)

# உற்பத்தியாளர்களுக்கு சுகாதார விழிப்புணர்வு



சம்மாந்துறை, பெப்.11

வட்டிலப்பம், மிக்சர் உற்பத்தி போன்ற சிறு கைத்தொழில் உற்பத்தியாளர்களுக்கு சுகாதார நடைமுறை மற்றும் உணவுச் சட்டம் தொடர்பாகவும், பிளாஸ்ரிக் பாவனையின் பாதிப்பு தொடர்பாகவும் விழிப்புணர்வு நிகழ்வு சம்மாந்துறை பிரதேச செயலக கேட்போர் கூடத்தில் கடந்த 7 ஆம் திகதி நடைபெற்றது.

இந்த விழிப்புணர்வு நிகழ்வு பிரதேச செயலக பங்களிப்புடன் சம்மாந்துறை சுகாதார வைத்திய அதிகாரி எம். எம். நௌசாத் தலைமையில் நடைபெற்றதுடன் பொதுச்சுகாதார பரிசோதகர்கள் மற்றும் பிரதேச செயலக சிறு கைத்தொழில் பிரிவு அலுவலர்களும் கலந்து கொண்டனர். (எ)

## மு. கா. எம்.பிக்களுக்கு கௌரவிப்பு



அட்டாளைச்சேனை, பெப்.11

கடந்த பொதுத் தேர்தலில் சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ் சார்பில் போட்டியிட்டு வெற்றி பெற்ற பாராளுமன்ற உறுப்பினர்களை கௌரவிக்கும் நிகழ்வு "மரத்தின் வேந்தர்களுக்கு மண்ணின் பெருவிழா" எனும் தொனிப்பொருளில் அம்பாறை, அட்டாளைச்சேனை மீலாத் சதுக்கத்தில் நேற்று முன்தினம் நடைபெற்றது.

இந்த நிகழ்வில், சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ் பாராளுமன்ற உறுப்பினர்களான கட்சியின் தலைவர் ரவூவ் ஹக்கீம், கட்சியின் பிரதித் தலைவர் ஏ. எம் ஹிஸ்புல்லாஹ், செயலாளர் எம். நிஸாம் காரியப்பர், பிரதி தேசிய அமைப்பாளர் எம். எஸ். உதுமாலெப்பை மற்றும் தேசிய இணைப்புச் செயலாளர் எம். எஸ். நழீம் ஆகியோர் இந்தப் பெருவிழாவில் கௌரவிக்கப்பட்டனர். (எ)


# பாடசாலை மாணவர்களுக்கு சான்றிதழ் வழங்கும் நிகழ்வு

கல்முனை, பெப்.11

ஒலுவில் அல் - ஹம்றா மகா வித்தியாலயத்தில் கடெட் பயிற்சியில் பங்கேற்ற மாணவர்களுக்கு நேற்றுத் திங்கட்கிழமை காலை நடைபெற்ற பொதுக்கூட்டத்தின்போது சான்றிதழ் வழங்கப்பட்டது.

இந்த நிகழ்வில் கல்முனை உதவிப்பொலிஸ் அத்தியட்சகர் எம். கே. இப்னு அஸார் கலந்து கொண்டு மாணவர்களுக்கு சான்றிதழ்களை வழங்கி கௌரவித்தார்.

மாணவர்களுக்கு பயிற்சிகளை வழங்கும் பொலிஸ் உத்தியோகத்தர் எம். சுதர்சன்,



பிரதி, உதவி அதிபர்கள், ஆசிரியர்கள், மாணவர்கள் எனப்பலரும் இதில் கலந்து கொண்டனர். (எ)

# கோணாவத்தை ஆற்றங்கரை வீதி எப்போது புனரமைப்பு செய்யப்படும்?

## மக்கள் கடும் விசனத்துடன் கேள்வி

அக்கரைப்பற்று, பெப்.11

அட்டாளைச்சேனை- அக்கரைப்பற்று பிரதேசங்களை இணைக்கும் கோணாவத்தை ஆற்றங்கரை பிரதான வீதி கடந்த மூன்று மாத காலமாக சிதைவடைந்து காணப்படுகிறது. தற்போது இந்த வீதியூடான போக்குவரத்து முற்றாகத் தடைப்பட்டுள்ளதாகவும் பிரதேச மக்கள் கவலை வெளியிட்டுள்ளனர்.

அக்கரைப்பற்று, அட்டாளைச்சேனை, பாலமுனை மற்றும் ஒலுவில் ஆகிய பிரதேசங்களைச் சேர்ந்த பல நூற்றுக்கணக்கான பொதுமக்கள் தினமும் பயன்படுத்தும் பாதையாகவும் இவ்வீதி உள்ளது. இவ்வீதியை புனரமைத்து தருமாறு பல தடவைகள் கோரிக்கை விடுத்தும் அதிகாரிகள் அசமந்தப் போக்கில் உள்ளதாக பொதுமக்கள் குற்றஞ்சாட்டியுள்ளனர்.

கோணாவத்தை ஆறு மற்றும் கடற்கரையை அண்டிய பகுதியில் இவ்வீதி அமையப் பெற்றுள்ளதால் மீன்பிடித் தொழிலாளர்கள் இப்பாதையை வெகுவாக பயன்படுத்தியும் வந்துள்ளனர்.

கடந்த மூன்று மாதங்களுக்கு முன்னர் இப்பிரதேசத்தில் ஏற்பட்ட வெள்ள நிலைமை காரணமாக இவ்வீதி உடைப்பெடுத்தமையால் சிறியளவில் சிதைவடைந்து காணப்பட்டது. சிதைவடைந்த இவ்வீதியை மக்கள் சிரமத்துடன் போக்குவரத்துக்காக பயன்படுத்தி வந்த நிலையில், கடந்த ஒரு மாதத்துக்கு முன்னர் பெய்த அடைமழை காரணமாக மக்கள் குடியிருப்புகளுக்குள் வெள்ள நீர் நிறைந்திருந்து காணப்பட்டது.

வெள்ள நீரை அப்புறப்படுத்தும் வகையில் குறித்த இவ்வீதி அட்டாளைச்சேனை பிரதேச சபை மூலம் கனரக வாகனத்தின் உதவியுடன் உடைக்கப்பட்டு ஆற்றுப் பகுதிக்குள் வெள்ளம் வெளியேற்றப்பட்டது. இவ்வாறு உடைக்கப்பட்ட வீதி ஒரு மாத காலத்துக்கும் மேலாக சீர் செய்யப்படாமல் கைவிடப்பட்ட நிலையில் காணப்படுகின்றது.

மழை காலங்களில் நிரம்பும் வெள்ள நீரினை அப்புறப்படுத்தும் வகையில் முறையான திட்டமிடலின்றியும், போதியள விலான வடிகான்கள் இன்றியும் இவ்வீதி நிர்மாணிக்கப்பட்டதாகவும், மழை காலங்களில் தொடர்ச்சியாக இவ்வீதி உடைப்பெடுப்பதாகவும் பிரதேச மக்கள் கூறினர்.

சிதைவடைந்து காணப்படும் இவ்வீதி இரவு வேளைகளில் இருள் சூழ்ந்து காணப்படுவதனால் பல்வேறு விபத்துச் சம்பவங்களும் இடம்பெறுவதோடு, மாணவர்கள், வயோதிபர்கள், பெண்கள் போன்றோர் இப்பாதையை பயன்படுத்துவதில் பல்வேறான சிரமங்களை எதிர்நோக்குகின்றனர்.(எ)

# காத்தான்குடி பிரதேச செயலக அபிவிருத்திக்குழுக் கூட்டம்




மட்டக்களப்பு, பெப்.11

காத்தான்குடி பிரதேச செயலக அபிவிருத்திக்குழுக் கூட்டம் நேற்றுத் திங்கட்கிழமை பிரதேச செயலாளர் நிஹாரா மொஜஹித் வழிநடத்தலில் பாராளுமன்ற உறுப்பினரும் அபிவிருத்திக் குழுத் தலைவருமான கந்தசாமி பிரபு தலைமையில் நடைபெற்றது.

இதில், பாராளுமன்ற உறுப்பினரும் சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸின் பிரதித் தலைவருமான ஏ. எம் ஹிஸ்புல்லாஹ் மற்றும் பாராளுமன்ற உறுப்பினர் எம். எஸ். நழீம் மற்றும் உயர் அதிகாரிகள் எனப் பலர் கலந்துகொண்டனர். (எ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# லொறிமீது மோதிய பஸ் 41 பேர் உடல் கருகி பலி!

## மெச்சிக்கோவில் பெரும் சோகம்



மெக்சிக்கோ சிற்றி, பெப்.11

**லொறிமீது பஸ் மோதி தீப்பற்றி எரிந்ததில் 41 பேர் உடல் கருகி உயிரிழந்தனர். இந்தச் சம்பவம் மெக்சிக்கோவில் பெரும் சோகத்தை ஏற்படுத்தியுள்ளது.**

வடக்கு அமெரிக்காவில் அமைந்துள்ள நாடு மெக்சிக்கோ. இந்த நாட்டின், குயிண்டினா ரோ மாகாணம் கான்கன் நகரிலிருந்து நேற்று முன்தினம் டபாஸ்கோ நகருக்கு பஸ் சென்றுகொண்டிருந்தது. அந்த பஸ்சில் 48 பேர் பயணித்தனர்.

எஸ்கார்சிகா என்ற பகுதியில் சென்றபோது சாரதியின் கட்டுப்பாட்டை இழந்த பஸ், வீதியின் எதிரே வந்த லொறி மீது வேகமாக மோதியது. இந்த விபத்தில் பஸ் தீப்பற்றி எரிந்தது. இதனால், பஸ்சில் இருந்த பயணிகள் தீயில் சிக்கிக்கொண்டனர்.

இந்த விபத்து குறித்து தகவலறிந்த தீயணைப்பு, மீட்புப்படையினர் சம்பவ இடத்துக்கு விரைந்து சென்று தீயை அணைத்தனர். ஆனாலும், இந்த சம்பவத்தில் பஸ்ஸில் பயணித்த 41 பேர் உடல் கருகி உயிரிழந்தனர். மேலும், 7 பேர் படுகாயமடைந்தனர்.

இந்த விபத்து குறித்து அதிகாரிகள் விசாரணை நடத்தி வருகின்றனர். (எ)

## முதல்வர் ஆதிஷி இராஜினாமா!



புதுடில்லி, பெப்.11

இந்தியாவின் டில்லி சட்டப்பேரவைத் தேர்தலில் ஆம் ஆத்மி கட்சி தோல்விய டைந்ததை அடுத்து முதல்வர் ஆதிஷி தனது பதவியை இராஜினாமா செய்தார்.

டில்லியில் மொத்தம் உள்ள 70 சட்டப்பேரவைத் தொகுதிகளில் ஆம் ஆத்மி கட்சி 22 தொகுதிகளில் மட்டுமே வெற்றி பெற்றது. இதனால், ஆட்சியை இழந்தது. கடந்த 27 ஆண்டுகளுக்குப் பின்னர் பா. ஜ. க. 48 இடங்களில் வெற்றி பெற்று ஆட்சியைக் கைப்பற்றியுள்ளது. காங்கிரஸ் தொடர்ந்து 3ஆவது தேர்தலிலும் ஓர் இடத் தில் கூட வெற்றி பெறவில்லை.

இந்த நிலையில், டில்லி துணைநிலை ஆளுநர் வி. கே. சக்சேனாவை ராஜ்நிவாஸில் நேற்று முன்தினம் சந்தித்து தனது இராஜினாமா கடிதத்தை முதல்வர் ஆதிஷி வழங்கினார்.

டில்லியில் மதுபான ஊழல் வழக்கில் ஆம் ஆத்மி ஒருங்கிணைப்பாளர் அரவிந்த் கெஜ்ரிவால் கைது செய்யப்பட்டார். எனினும், முதல்வர் பதவியை இராஜினாமா செய்யாமல், சிறையில் இருந்தே ஆட்சி நிர்வாகத்தை கவனித்தார்.

பின்னர் பிணையில் வெளியில் வந்த கெஜ்ரிவால், முதல்வர் பதவியை இராஜினாமா செய்தார். அவருக்குப் பதிலாக ஆதிஷியை முதல்வராக்கினார்.

இந்த நிலையில் அண்மையில் நடந்து முடிந்த டில்லி சட்டப்பேரவை தேர்தலில் ஆம் ஆத்மி கட்சி ஆட்சியை இழந்தது. இருப்பினும், கல்காஜி தொகுதியில் போட்டியிட்ட ஆதிஷி வெற்றி பெற்றார். ஆனால், முன்னாள் முதல்வர் கெஜ்ரிவால் உட்பட முக்கிய தலைவர்கள் தோல்வியடைந் தனர். (எ)

## பயங்கரவாதிகள் தாக்குதல் தொழிலாளர்கள் 32 பேர் பலி



பமாகோ, பெப்.11

மாலியில் பயங்கரவாதிகள் நடத்திய தாக்குதலில் தங்க சுரங்க தொழிலாளர்கள் 32 பேர் உயிரிழந்தனர்.

மேற்கு ஆபிரிக்க நாடான மாலியில் இராணுவ ஆட்சி நடைபெற்று வருகிறது. இந்த நாட்டில் ஐ. எஸ். ஐ. எஸ்., அல் - கொய்தா ஆதரவு பயங்கரவாத குழுக்கள் ஆதிக்கம் செலுத்தி வருகின்றன. இந்த பயங்கரவாத குழுக்கள் பொதுமக்களை குறிவைத்து தாக்குதல்களை நடத்தி வருகின்றன.

இந்த நிலையில், அந்த நாட்டின் வடக்கு பகுதியில் கோவா நகரில் தங்க சுரங்கம் உள்ளது. இந்த சுரங்கத்துக்கு நேற்று முன்தினம் தொழிலாளர்கள் ஏற்றிக்கொண்டு வாகனங்கள் சென்றுகொண்டிருந்தன. அவர்களுக்கு பாதுகாப்பாக இராணுவத்தினரும் சென்றனர்.

அப்போது, அந்த வாகனங்களை குறித்து பயங்கரவாதிகள் தாக்குதல் நடத்தினர். இந்தத் தாக்குதலில் தங்க சுரங்க தொழிலாளர்கள் 32 பேர் உயிரிழந்தனர்.

மேலும், பலர் படுகாயமடைந்தனர். இந்தத் தாக்குதலை தொடர்ந்து இராணுவத்தினரும் பதிலடி தாக்குதல் நடத்தினர். இதில், பல பயங்கரவாதிகளும் பலியாகினர்.(எ)

### விண்வெளி ஆராய்ச்சியில்

## ஓட்சிசன் மற்றும் ரொக்கெட்டுக்கு எரிபொருளை உருவாக்கும் சீனா


பீஜிங், பெப்.11

சீனாவின் விண்வெளி நிலையத்தில் மேற்கொள்ளப்பட்ட தொடர்ச்சியான ஆய்வுகளில் முதன்முறையாக ஒட்சிசன் மற்றும் ரொக்கெட்டுக்குத் தேவையான எரிபொருளுக்கான பொருட்கள் உற்பத்தி செய்யப்பட்டுள்ளன.

இந்த ஆய்வு மனிதர்கள் உயிர்வாழ்வதற்கும் விண்வெளியின் எதிர்கால ஆய்வுகளுக்கும் இன்றியமையாததாகக் கருதப்படுகிறது.

முதல் முறையாக பூமியின் கீழ் சுற்றுப்பாதையில் செயற்கை ஒளிச்சேர்க்கை தொழில்நுட்பம், ஒட்சிசன் மற்றும் ரொக்கெட் எரிபொருளுக்குத் தேவையான பொருட்களை உருவாக்கி டியான்காங் விண்வெளி நிலையத்தில் உள்ள குழுவினர் 2030 இற்கு முன் நிலவில் தரையிறக்கம் உட்பட நீண்ட கால விண்வெளி ஆய்வுக்கு வழி வகுத்துள்ளனர்.

## காஸா வழித்தடத்திலிருந்து இஸ்ரேல் படைகள் வாபஸ்



டெல் அவிவ், பெப்.11

காஸாவின் முக்கிய பகுதியிலிருந்து இஸ்ரேல் படைகளை திரும்பப் பெற்றது.

இஸ்ரேல் - ஹமாஸ் இடையே ஏற்பட்ட போர் நிறுத்த ஒப்பந்தத்தைத் தொடர்ந்து இரு தரப்பும் பணயக் கைதிகளை படிப்படியாக விடுவித்து வருகிறது. இதுவரை 5 முறை பணயக் கைதிகள் பரிமாற்றம் நடந்துள்ளது. அதே போன்று காஸாவில் நடந்த உக்கிரமான சண்டை காரணமாக இடம்பெயர்ந்த பலஸ்தீனர்கள் தங்கள் பகுதிகளுக்கு திரும்புவதற்கும் அனுமதிக்கப்படுகிறது.

வடக்கு காஸாவையும், தெற்கு காஸாவையும் பிரிக்கும் முக்கிய பகுதியாக நெட்சாரிம் பகுதி உள்ளது. போரின்போது அதை இராணுவ மண்டலமாக இஸ்ரேல் அறிவித்து, தனது கட்டுப்பாட்டில் வைத்திருந்தது. போர் நிறுத்த ஒப்பந்தத்தின் தொடக்கத்தில், போரினால் கடுமையாக பாதிக்கப்பட்ட வடக்கு காஸாவில் உள்ள தங்கள் வீடுகளுக்கு செல்வதற்காக பலஸ்தீனர்களை நெட்சாரிமைக் கடந்து செல்ல இஸ்ரேல் அனுமதியளித்தது.

இந்த நிலையில், நெட்சாரிம் பாதையில் இருந்து இஸ்ரேல் தனது படைகளை நேற்று முன்தினம் திரும்பப் பெற்றுள்ளது. அங்கிருந்து காஸா முனையின் கிழக்கு எல்லையில் இஸ்ரேல் உருவாக்கிய இராணுவ மண்டலத்துக்கு படைகள் திரும்பின. இதனால் தெற்கிலிருந்து சொந்த ஊர்களுக்கு திரும்பும் பலஸ்தீனர்கள், இஸ்ரேல் படையினரின் எந்த வித சோதனையும் இன்றி அனுமதிக்கப்படுகின்றனர்.

42 நாட்கள் நீடிக்கும் வகையிலான போர் நிறுத்தம் பாதியை கடந்துவிட்டது. இன்னும் ஹமாஸ் பிடியில் பல இஸ்ரேலிய பணயக்கைதிகள் உள்ளனர்.

அவர்களை விடுவிப்பதற்காக போர் நிறுத்தத்தை நீடிக்க வேண்டியது அவசியம். இது தொடர்பில் இரு தரப்பினரும் பேச்சுக்கள் நடத்த வேண்டும். ஆனால், ஒப்பந்தம் நீட்டிப்புக்கான எந்த உத்தரவாதமும் இதுவரை வழங்கப்படவில்லை. (எ)

## லெபனானில் சுரங்க பாதைமீது இஸ்ரேல் வான்வழித் தாக்குதல்

பெய்ரூட், பெப்.11

லெபனானில் சுரங்க பாதை மீது நள்ளிரவு வேளை இஸ்ரேல் வான்வழித் தாக்குதல் நடத்தியுள்ளது.

இஸ்ரேல் மீது கடந்த 2023ஆம் ஆண்டு ஒக்ரோபர் 7ஆம் திகதி ஹமாஸ் அமைப்பு கொடூரத் தாக்குதல் நடத்தியது.

இதனைத் தொடர்ந்து காஸாவுக்கு எதிராக இஸ்ரேல் போரில் இறங்கியது. ஓராண்டை கடந்து இடம்பெற்று வரும் மோதலில் 46 ஆயிரத்துக்கும் மேற்பட்ட பலஸ்தீனர்கள் காஸா பகுதியில் உயிரிழந்தனர். இலட்சக்கணக்கானோர் காயமடைந்துள்ளனர். இதனை காஸா சுகாதார அதிகாரிகள் உறுதி செய்துள்ளனர்.

பலஸ்தீனர்களுக்கு ஆதரவாக, ஹிஸ்புல்லா அமைப்பும் போரில் ஈடுபட்டு வருகிறது. லெபனான் நாட்டில் இருந்தபடி, இஸ்ரேலை தாக்கி வருகிறது. இதற்கு இஸ்ரேலும் பதிலடி கொடுத்து வருகிறது.

சிரியா நாட்டின் எல்லையையொட்டி லெப னான் நாடு அமைந்துள்ளது. லெபனானில் சுரங்க பாதை அமைத்து ஹிஸ்புல்லா அமைப்பு ஆயுதங்களை கடத்துகிறது என்ற குற்றச்சாட்டு முன்வைக்கப்பட்டுள்ளது. இந்தச் சூழலில், நேற்று முன்தினம் நள்ளிரவு இஸ்ரேலின் விமானப் படை போர் விமானங்கள், லெபனானின் பெகா பகுதியில் உள்ள சுரங்க பாதை மீது வான்வழித் தாக்குதல் நடத்தியது.

கடந்த காலங்களிலும் இந்த சுரங்க பாதை மீது தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது.

இந்த சுரங்கத்தை மீண்டும் புதுப்பித்து பயன்படுத்துவதை தடுக்கும் வழிகளை மேற்கொள்வோம் என இஸ்ரேல் உறுதி கூறியுள்ளது.

இஸ்ரேலுக்கு உடனடி அச்சுறுத்தலை ஏற்படுத்தக் கூடியது என கூறப்படும், ஆயுதங்கள் மற்றும் ரொக்கெட் லோஞ்சர்கள் அடங்கிய பல்வேறு இடங்கள் மீதும் விமானங்கள் தாக்குதலை நடத்தின.

இஸ்ரேல் மற்றும் லெபனான் இடையே போர் நிறுத்த ஒப்பந்தம் உள்ள சூழலில், இதனை மீறும் வகையில் இந்த தாக்குதல் அமைந்துள்ளது. (எ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 4 விக்கெட் வித்தியாசத்தில் இந்திய அணி அபார வெற்றி

## ஒருநாள் தொடரை இழந்தது இங்கிலாந்து

கட்டாக், பெப்.11


இங்கிலாந்துக்கு எதிரான இரண்டாவது ஒருநாள் போட்டியில் 4 விக்கெட்கள் வித்தியாசத்தில் இந்திய அணி அபார வெற்றி பெற்றது.

இங்கிலாந்து கிரிக்கெட் அணி, இந்தியாவில் சுற்றுப்பயணம் மேற்கொண்டு விளையாடி வருகிறது. இவ்விரு அணிகள் இடையிலான 3 ஆட்டங்கள் கொண்ட ஒருநாள் தொடரில் நாக்பூரில் நடந்த முதலாவது ஆட்டத்தில் இந்திய அணி 4 விக்கெட்கள் வித்தியாசத்தில் வெற்றி பெற்று 1-0 என்ற கணக்கில் முன்னிலையில் இருந்தது.

இதனையடுத்து 2ஆவது ஒருநாள் போட்டி ஒடிசா மாநிலம் கட்டாக்கில் உள்ள பாராபதி மைதானத்தில் நேற்று முன்தினம் நடைபெற்றது. இதில் முதலில் துடுப்பெடுத்தாடிய இங்கிலாந்து 49. 5 ஓவர்களில் 304 ஓட்டங்கள் அடித்த நிலையில் சகல விக்கெட்களையும் இழந்தது. அதிகபட்சமாக ஜோ ரூட் 69 ஓட்டங்களும், பென் டக்கெட் 65 ஓட்டங்களும் அடித்தனர். இந்தியா தரப்பில் ஜடேஜா 3 விக்கெட்கள் வீழ்த்தினார்.

இதனையடுத்து 305 ஓட்டங்கள் அடித்தால் வெற்றி என்ற இலக்கை நோக்கி களமிறங்கிய இந்திய அணிக்கு தொடக்க ஆட்டக்காரர்களாக சுப்மன் கில் - ரோஹித் சர்மா களமிறங்கினர். இதில் கில் நிதான ஆட்டத்தை வெளிப்படுத்த ரோஹித் சர்மா இங்கிலாந்து பந்து வீச்சை வெளுத்து வாங்கினார், வெறும் 30 பந்துகளில் அரைச்சதம் அடித்தார். நேரம் செல்ல செல்ல சுப்மன் கில்லும் அதிரடியாக விளையாட இந்திய அணி வெற்றியை நோக்கி வேகமாக முன்னேறியது. சுப்மன் கில்லும் அரைச்சதம் அடித்தார்.

முதல் விக்கெட்டுக்கு இருவரும் இணைந்து 136 ஓட்டங்கள் இணைப்பாட்டம் அமைத்த நிலையில் சுப்மன் கில் 60 ஓட்டங்களில் ஆட்டமிழந்தார். அடுத்து வந்த விராட் கோலி 5 ஓட்டங்களில் ஆட்டமிழந்தார். பின்னர் ரோஹித்துடன் கை கோர்த்த ஸ்ரேயஸ் ஐயரும் சிறப்பாக விளையாட இந்திய அணி சிக்கலின்றி



வெற்றியை நோக்கிப் பயணித்தது.

அதிரடி ஆட்டத்தை வெளிப்படுத்திய ரோஹித் சர்மா 76 பந்துகளில் சதம் விளாசினார். சதம் அடித்த சிறிது நேரத்திலேயே 119 ஓட்டங்களில் ஆட்டமிழந்தார்.

அவரைத் தொடர்ந்து ஸ்ரேயஸ் ஐயரும் 44 ஓட்டங்களில் விக்கெட்டை பறிகொடுத்தார். இறுதி கட்டத்தில் இங்கிலாந்து பந்துவீச்சாளர்கள் விரைவாக விக்கெட்கள் வீழ்த்தினர்.

கே. எல். ராகுல் மற்றும் ஹர்த்திக் பாண்டியா தலா 10 ஓட்டங்களில் ஆட்டமிழந்தனர். இருப்பினும், அக்சர் பட்டேல் சிறப்பாக விளையாடி அணியை வெற்றி பெற வைத்தார். 44. 3 ஓவர்களில் 6 விக்கெட்களை இழந்த இந்தியா 308 ஓட்டங்கள் அடித்து 4 விக்கெட்கள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது.

அக்சர் பட்டேல் 41 ஓட் டங்களுடனும், ஜடேஜா 11 ஓட்டங்களுடனும் களத் தில் இருந்தனர். இங்கிலாந்து தரப்பில் ஜேமி ஓவர்டான் 2 விக்கெட்கள் வீழ்த்தினார்.

இந்த வெற்றியின் மூலம் இங்கிலாந்துக்கு எதிரான ஒருநாள் தொடரை இந்தியா 2-0 என்ற கணக்கில் ஆரம்பத்திலேயே கைப்பற்றியுள்ளது. (எ)

# இந்தியா - இங்கிலாந்து கடைசி போட்டி நாளை

## ஜேக்கப் பெத்தேல் விலகல்

லண்டன், பெப்.11

இந்தியாவுக்கு எதிரான 3ஆவது ஒருநாள் போட்டி, சம்பியன்ஸ் கிண்ண தொடரிலிருந்து இங்கிலாந்து வீரர் ஜேக்கப் பெத்தேல் விலகியுள்ளார்.

இந்தியா - இங்கிலாந்து இடையே 3 போட்டிகள் கொண்ட ஒருநாள் தொடர் நடைபெற்று வருகிறது. இதில் 2 போட்டிகள் முடிவடைந்த நிலையில் தொடரை இந்தியா 2 - 0 என்ற கணக்கில் கைப்பற்றி விட்டது. இதனையடுத்து இவ்விரு அணிகள் இடையிலான 3ஆவது மற்றும் கடைசி ஒருநாள் போட்டி நாளை 12ஆம் திகதி நடைபெறவுள்ளது.

இந்த ஒருநாள் தொடர் நிறைவடைந்ததும் 8 அணிகள் இடையிலான ஐ. சி. சி. சம்பியன்ஸ் கிண்ணத் தொடர் வரும் 19ஆம் திகதி ஆரம்பமாகவுள்ளது.

இந்த நிலையில் இந்தியாவுக்கு எதிரான 3ஆவது ஒருநாள் போட்டி மற்றும் சம்பியன்ஸ் கிண்ணத் தொடரிலிருந்து இங்கிலாந்து அணியின் இளம் நட்சத்திர வீரர் ஜேக்கப் பெத்தேல் விலகியுள்ளார்.

இந்தியாவுக்கு எதிரான முதல் ஒருநாள் போட்டியின் முடிவில் தொடை பகுதியில் ஏற்பட்ட காயம் காரணமாக நேற்று முன்தினம் நடைபெற்ற 2ஆவது போட்டியில் அவர் களமிறங்கவில்லை. காயம் முழுமையாக குணமடைய இன்னும் சில வாரங்கள் ஆகும் என்பதால் அவர் விலகியுள்ளார். இவரது விலகலை இங்கிலாந்து அணியின் தலைவர் ஜோஸ் பட்லர் நேற்று முன்தினம் போட்டியின் முடிவில் உறுதி செய்தார்.

இவர் இந்தியாவுக்கு எதிரான முதல் ஒருநாள் போட்டியில் அரைச்சதம் மற்றும் ஒரு விக்கெட் வீழ்த்தியிருந்தார். (எ)



# ரத்த காயத்துடன் வெளியேறினார் ரச்சின் ரவீந்திரா

லாகூர், பெப்.10


நியூசிலாந்து வீரர் ரச்சின் ரவீந்திராவுக்கு பலத்த காயம் ஏற்பட்டது. இதனால், அவர் இரத்த காயத்துடன் வெளியேறினார்.



லாகூரில் கடந்த 8 ஆம் திகதி நடைபெற்ற முதலாவது லீக் ஆட்டத்தில் பாகிஸ்தான் - நியூசிலாந்து அணிகள் மோதின.

இந்த போட்டியின் 38ஆவது ஓவரில், பாகிஸ்தான் வீரர் குஷ்தில் ஷா அடித்த பந்தை பிடிக்க ரச்சின் ரவீந்திரா முயன்றார். அப்போது, மைதானத்தில் இருந்த ஒளி அவரது கண்களை மறைத்ததால், அவரால் பந்தை பிடிக்க முடியவில்லை. மாறாக பந்து அவரது முகத்தில் தாக்கி பலத்த இரத்த காயம் ஏற்பட்டது. உடனடியாக அவர் மருத்துவமனைக்கு கொண்டு செல்லப்பட்டார். (எ)

# வெறும் 73 வினாடிகளில் ஓர் ஓவர் வீசிய ஜடேஜா



கட்டாக், பெப்.11

வெறும் 73 வினாடிகளில் ஓர் ஓவரை ஓட்டமற்ற ஓவராக வீசி முடித்துள்ளார் ரவீந்திர ஜடேஜா.

இந்தியா - இங்கிலாந்து இடையிலான 2ஆவது ஒருநாள் போட்டி கட்டாக் மைதானத்தில் நேற்று முன்தினம் நடைபெற்றது. இதில் இந்தியா தரப்பில் ஜடேஜா 3 விக்கெட்கள் வீழ்த்தினார்.

அத்தோடு, இங்கிலாந்து அணியின் துடுப்பாட்டத்தின்போது 24ஆவது ஓவரை ஜடேஜா வீசினார். அந்த ஓவரை எதிர்கொண்ட ஹாரி புரூக் அதில் ஓட்டம் எதுவும் அடிக்கவில்லை.

அந்த ஓவரை ஜடேஜா வெறும் 73 வினாடிகளில் வீசியுள்ளார். இது அரிய நிகழ்வு என்று பலரும் ஜடேஜாவை பாராட்டி வருகின்றனர். (எ)

# சென்னை ஓபன் ரென்னிஸ் சம்பியனானார் ஜாக்குயட்

சென்னை, பெப்.11

சென்னை ஓபன் ரென்னிஸ் தொடரில் பிரான்ஸின் கிரியான் ஜாக்குயட் சம்பியனானார்.

சென்னை நுங்கம்பாக்கத்தில் கடந்த ஒரு வாரமாக நடைபெற்று நேற்று முன்தினத்துடன் முடிவுக்கு வந்தது இந்தத் தொடர். இதில் நேற்று முன்தினம் நடைபெற்ற ஒற்றையர் பிரிவின் இறுதிப்போட்டியில் பிரான்ஸின் கிரியான் ஜாக்குயட், சுவீடனின் எலியாஸ் யமெரை எதிர்கொண்டார்.

தொடக்கம் முதலே ஆதிக்கம் செலுத்திய கிரியான் ஜாக்குயட் முதல் இரு செட்களையும் கைப்பற்றி வெற்றி பெற்றார். ஒரு மணி நேரம் 37 நிமிடங்கள் நீடித்த இந்த ஆட்டத்தில் ஜாக்குயட் 7 - 6 (1), 6 - 4 என்ற நேர் செட்டில் யமெரை தோற்கடித்து சம்பியன் கிண்ணத்தை சுவீகரித்தார். (எ)

# சாதனைப் பட்டியலில் ரோஹித் முன்னேற்றம்

கட்டாக், பெப்.11

ஒருநாள் கிரிக்கெட் போட்டிகளில் மாபெரும் சாதனை பட்டியலில் இந்திய அணியின் தலைவர் ரோஹித் சர்மா முன்னேறியுள்ளார்.

இந்தியா - இங்கிலாந்து இடையிலான 2ஆவது ஒருநாள் போட்டி கட்டாக் மைதானத்தில் நடை பெற்றது. இதில் ரோஹித் சர்மா அதிரடியாக விளையாடினார், சிக்ஸரும் பௌண்டரியுமாக விளாசிய அவர் 76 பந்துகளில் சத்தை நிறைவு செய்தார்.

இந்த ஆட்டத்தில் ரோஹித் சர்மா அடித்த 7 சிக்ஸர்களையும் சேர்த்து ஒருநாள் கிரிக்கெட்டில் அவரது சிக்ஸர் எண்ணிக்கை 338 ஆக உயர்ந்துள்ளது. இதன் மூலம் ஒரு நாள் போட்டியில் அதிக சிக்ஸர் அடித்தவர்களின் பட்டியலில் 2-ஆவது இடத்தில் இருந்த மேற்கு இந்திய தீவுகளின் கிறிஸ் கெய்லை (331 சிக்ஸர்) பின்னுக்குத் தள்ளி ரோஹித் சர்மா அந்த இடத்தை பிடித்துள்ளார். இந்தப் பட்டியலில் பாகிஸ்தானின் சஹித் அப்ரிடி 351 சிக்ஸருடன் முதலிடத்தில் உள்ளார். (எ)

# மோசமான சாதனையில் இங்கிலாந்து முதலிடம்

கட்டாக், பெப்.11

மோசமான சாதனையில் இந்தியாவை பின்னுக்குத் தள்ளி இங்கிலாந்து முதலிடம் பிடித்தது.

இந்தியா - இங்கிலாந்து இடையிலான 2ஆவது ஒருநாள் போட்டி கட்டாக் மைதானத்தில் நேற்று முன்தினம் நடைபெற்றது. இதில் இந்தியா 4 விக்கெட்கள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது.

இந்தப் போட்டியையும் சேர்த்து ஒருநாள் கிரிக்கெட்டில் முதலில் துடுப்பெடுத்தாடி இங்கிலாந்து அணி, 300 ஓட்டங்கள் கடந்து தோல்வியை சந்திப்பது 28ஆவது முறையாகும். இதன் மூலம் ஒருநாள் கிரிக்கெட் வரலாற்றில் அதிக முறை 300 ஓட்டங்களுக்கு மேல் ஓட்டங்கள் அடித்து தோல்வியைத் தழுவிய அணி என்ற மோசமான சாதனையில் இந்தியாவை பின்னுக்குத் தள்ளி இங்கிலாந்து முதலிடம் பிடித்தது.

அந்தப் பட்டியல் வருமாறு, 1. இங்கிலாந்து - 28 முறை, 2. இந்தியா - 27 முறை, 3. மேற்கு இந்திய தீவுகள் [illegible] (எ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழநாடு



## மீண்டும்...

ஆணைக்குழுவுக்கு அனுப்பி வைக்கப் பட்டுள்ளதாக இலங்கை மின்சார சபை தெரிவித்துள்ளது.

நேற்று முன்தினம் நாடளாவிய ரீதியில் ஏற்பட்ட திடீர் மின்தடையை அடுத்து, நுரைச்சோலை அனல் மின் நிலையத்தின் மூன்று மின் உற்பத்தி இயந்திரங்களும் செயலிழந்துள்ளன.

குறித்த இயந்திரங்களை மீண்டும் தேசிய மின் கட்டமைப்புடன் இணைப் பதற்கு சுமார் 4 நாட்களாகும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த இயந்திரங்களின் செயலிழப்பி னால் தேசிய மின் கட்டமைப்பில் ஏற்பட்டுள்ள சமநிலையற்ற தன்மையை முகாமை செய்து மின்சக்தியை பங்கீடு செய்யும் நோக்கில் மின்வெட்டை அமுல் படுத்துவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இதன்படி, பிற்பகல் 3.30 முதல் இரவு 9.30 வரையான காலப்பகுதியில் இந்த சுழற்சி முறையிலான மின் விநியோகத் தடை அமுல்படுத்தப்படவுள்ளதாக இலங்கை மின்சார சபை தெரிவித் துள்ளது. (அ)

## மாகாண சபை...

மக்களுக்கான எமது நேர்வழி அரசி யல் பயணத்தின்போது எதற்கும் அஞ்சி, அடிபணியப்போவதில்லை. போற்று வோர் போற்றட்டும், தூற்றுவோர் தூற் றட்டும். ஏனெனில் மக்கள் சக்தி எமது பக்கம் எனவும் அவர் கூறினார்.

சீனா மற்றும் இலங்கை நாட்டின் நட்புறவின் பயனாக "சீனாவின் சகோதர பாசம்" எனும் வாசகத்துடன் யாழ். மாவட்டத்தில் வெள்ளத்தால் பாதிக்கப் பட்ட குடும்பங்களுக்கு சீனா நாட்டின் உதவியில் உலருணவுப் பொதிகள் வழங்கும் நிகழ்வு நேற்று யாழ். மாவட்ட செயலக கேட்போர் கூடத்தில் மாவட்ட செயலாளர் பிரதீபன் தலைமையில் நடைபெற்றது.

இந்த நிகழ்வில் பிரதம அதிதியாக கடற்றொழில் மற்றும் நீரியல் கடல் வளங்கள் அமைச்சர் இராமலிங்கம் சந்திரசேகர் கலந்து கொண்டதோடு, சிறப்பு அதிதியாக இலங்கைக்கான சீனத்தூதரகத்தின் பிரதி பொறுப்பதி காரி யூ யான்வேய், அதிதியாக வட மாகாண ஆளுநர் நாகலிங்கம் வேதநாய கன் ஆகியோர் கலந்துகொண்டு யாழ். மாவட்டத்தில் தெரிவு செய்யப்பட்ட 1070 குடும்பங்களுக்கு உலருணவுப் பொதிகளை வழங்கினர்.

இந்நிகழ்வின் பின்னர் ஊடகங்களி டம் கருத்து வெளியிட்ட அமைச்சர் மேலும் கூறியவை வருமாறு-

சீனாவின் சகோதர பாசம் தொடர வேண்டும். தேசிய மக்கள் சக்தி ஆட்சி பீடம் வந்து 80 நாட்களுக்கு மேல் ஆகின்றது. இக்காலப்பகுதிக்குள் நாட் டைக் கட்டியெழுப்பும் பயணத்துக்கான அடித்தளம் இடப்பட்டு வருகின்றது. இதற்குரிய ஆணையை வழங்கிய மக்களுக்கு எமது நன்றிகள்.

யாழ். மக்களும் தேசிய மக்கள் சக்தியை முதன்மைக் கட்சியாக தெரிவுசெய்துள் ளனர். அதற்காக மீண்டும் நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கின்றேன். வறுமை ஒழித்தல், டிஜிற்றல் மயமாக்கல் உட்பட ஒட்டுமொத்த நாட்டையும் மேம்படுத் துவதற்கான திட்டமே கிளீன் சிறிலங்கா திட்டமாகும்.

அரசமைப்பின் 13 ஆவது திருத்தச் சட்டத்தின்கீழ்வரும் மாகாண சபை முறைமை நீண்டு நிலைக்கக்கூடிய நிரந்தர தீர்வு என நாம் நம்பவில்லை. எனினும், மாகாணசபை முறைமையை தமக்கு கிடைத்த உரிமையாக தமிழ் மக்கள் நம்புகின்றனர். எனவேதான் மாகாண சபை முறைமைமீது கைவைக்கா திருக்க தீர்மானிக்கப்பட்டுள்ளது. மாகாண சபை முறைமையை அர்த்த முள்ள முறைமையாக மாற்றியமைப் போம். இவ்வருடத்துக்குள் அல்லது அடுத்த வருடம் முற்பகுதியில் அதற்கான தேர்தல் நடத்தப்படும். சிறுபான்மையின மக்கள் உட்பட நாட்டு மக்களின் உரிமை களை நிலைநாட்டுகின்ற புதிய அரச மைப்பு கொண்டுவரப்படும் - என்றார்.

## தையிட்டி விகாரை உடைக்கப்பட ...

கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கும் போதே அவர் இவ்வாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

தையிட்டி விகாரைக்கு எதிராக நடத்தப்படவுள்ள போராட்டத்துக்கு ஜனநாயக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு முழுமையான ஆதரவை வழங்கும். அது உண்மையில் உடைக்கப்படவேண்டிய விடயம்.

வடக்கு-கிழக்கில் பிக்குகள் மற்றும் சில திணைக்களங்கள் நினைத்ததைச் செய்யும் ஒரு நிலை காணப்படுகிறது. எனவே இந்த விகாரை உடைக்கப்படவேண்டும் என்பதே எமது நிலைப்பாடு. அதற்கான ஆதரவை நாங்கள் வழங்குவோம். மக்களுடைய விருப்பமும் அதுவே- என்றார். (அ)

## 2 பஸ்கள்...

தெரிவிக்கப்பட்டுள்ளது.

கதுருவெலவில் இருந்து குருநாகல் நோக்கி பயணித்த பஸ் ஒன்று தோரயாய பகுதியில் நிறுத்தப்பட்டிருந்தவேளை யில், மாதுறுஓயாவிலிருந்து கொழும்பு நோக்கிப் பயணித்த பஸ் ஒன்று குறித்த பஸ்ஸின்மீது மோதியதில் விபத்து நேர்ந்துள்ளதாக தெரியவந்துள்ளது.

சம்பவம் தொடர்பில் குருநாகல் பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர்.

பஸ் அதிவேகமாக இயக்கப்பட்டதன் காரணத்தினாலே குறித்த விபத்து ஏற்பட் டுள்ளதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர் ரும், சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சக ருமான புத்திக மனதுங்க தெரிவித்தார்.

## மக்களின் விருப்ப...

ஊடகவியலாளர்கள் எழுப்பிய கேள்விக்கு பதிலளிக்கும்போதே மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

முதலில் யாழ்ப்பாணத்தில் உள்ள மக்களின் கருத்து என்னவென்பதை நாம் பார்க்க வேண்டும். தையிட்டியில் விகாரை கட்டப்படும்போது அது தொடர்பில் நடவடிக்கைகளை முன்னெடுக்காத வர்கள் தற்போது அந்தப் பிரச்னையை பூதகரமாக தூக்கிப் பிடிக்கின்றார்கள்.

தையிட்டி விகாரை விடயத்தைத் தூக்கிப்பிடிப்பவர்கள் உண்மையிலேயே அந்த விடயத்தை முன்னெடுக்கின்றார் களா? இல்லை விரைவில் உள்ளூராட்சி மன்றங்களுக்கான தேர்தல் வரவிருப்ப தால் அதற்கான துருப்புச்சீட்டாக இதனைப் பயன்படுத்தப் பார்க்கின்றார் களா?

தையிட்டி விகாரை விடயம் இனவா தத்தை, மதவாதத்தைத் தூண்டக்கூடியது. இனவாதத்தையும், மதவாதத்தையும் மக்கள் தோற்கடித்திருக்கின்றார்கள். அதுமட்டுமன்றி, நாட்டின் அபிவிருத்தி வேகமாக முன்னெடுக்கப்படுகின்றது.

ஆகவே அதுபற்றி கதைப்பதற்கு ஒன்றுமில்லை. அந்த வகையில் மதவா தத்தை இலகுவாகத் தூண்டி அதன் மூலமாக அரசியல் இலாபத்தைப் பெற்றுக்கொள்ளவே பார்க்கின்றார்கள்.

எவ்வாறாக இருந்தாலும் எமது அர சாங்கத்தின் கீழேயே இந்தப் பிரச்னைக் கும் தீர்வினை எட்டுவதற்கு நடவடிக் கைகளை முன்னெடுக்கவுள்ளோம். மக்களுடன் கலந்துரையாடி, மக்கள் பரிந்துரைக்கும் தீர்மானத்துக்கு செல்வ தற்கு நாம் தயாராகவே உள்ளோம்.

விகாரை அமைக்கப்பட்டமை சட்டவிரோதமானதா இல்லையா என்பது தொடர்பில் நாம் ஒவ்வொருவரும் தனிப்பட்ட கருத்துக்களை முன்வைக்க முடியும். ஆனால், விகாரை அமைக்கப் பட்டுள்ள நிலமானது மக்களுடையது என்பதில் மாற்றுக் கருத்துக்கு இட மில்லை. அதனால் அந்த நிலத்துக்குச் சொந்தக்காரர்களுக்கு மாற்றுக் காணிகளை அல்லது நட்டஈட்டை வழங்கவேண்டிய தேவையுள்ளது.

விகாரையை உடைத்து நொருக்குவ தால் பிரச்னைகளுக்கு தீர்வு கிடைக்குமா என்பது பற்றியும் சிந்திக்க வேண்டியுள் ளது. ஆகவே சுமுகமான தீர்வொன்றை நோக்கி நாம் செல்ல வேண்டும். இனவாதம், மதவாதம் தலைதூக்குவதற்கு இடமளிக் கக் கூடாது. அதில் நாம் உறுதியாக இருக்கின்றோம்-என்றார். (அ)

## பாலச்சந்திரன்...

குறித்த நுழைவு வளைவு திறந்து வைக் கும் நிகழ்வு நேற்று கல்லூரியின் முதல்வர் சவரி பூலோகராஜா தலைமையில் நடைபெற்றது.

நிகழ்வின் பின் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

விடுதலைப் புலிகளின் தலைவர் பிரபாகரனின் மகன் பாலசந்திரன் கொலை செய்யப்பட்டமை தொடர்பாக மகிந்த ராஜபக்ஷ வருந்துவதாக செய்தி கள் வெளிவந்திருப்பது. உன்னிப்பாக அவதானிக்கப்படவேண்டியது.

அப்பாவி மாணவன் குழந்தையாக இருக்கின்றபோது பிஸ்கட் கொடுத்து அவரை மிக அருகில் வைத்துச் சுட்டுக் கொன்றார்களோ, அதனைச் சிந்திக்காத மகிந்தவின் குடும்பம், இப்பொழுதாவது மகிந்த ராஜபக்ஷவின் வாயால் அதனை ஒரு கனதியான வேதனையாக வெளிப் படுத்தியிருப்பதை மிக அவதானத்துடன் பார்க்கிறோம்.

இந்த மண்ணில் மிகப்பெரிய மனிதப் பேரவலங்களை நடத்துவதற்கு காரண மாக இருந்த மகிந்த ராஜபக்ஷ, கோட்ட பாய ராஜபக்ஷ மற்றும் அவரின் குடும்பம் சார்ந்தவர்கள் இன்றாவது ஈழத்தமிழர் களுக்கு நடந்த அநீதி தொடர்பாக மெல்ல வாய் திறக்க நினைப்பது காலமும் கர்மாவும் அவர்களுக்கு கொடுத்த தண்டனையாகவே கருதுகிறேன்.

ஜனாதிபதியாக அவர் இருந்த காலகட்டத்தில் யுத்தம் முடிந்தபோது இந்த நாட்டில் தமிழ் மக்களின் தேசிய பிரச்னையை தீர்க்கக்கூடிய மிகப்பெரிய தலைவராக அவர் இருந்தார்.

அவருக்கு சிங்கள மக்களின் அதிகமான ஆதரவு இருந்தது. இனப்பிரச்னையை தீர்த்திருக்க முடியும். வரலாற்றில் பிழைவிட்ட தலைவராக அவர் வாழ்கின்றார். அவர் இப்பொழுதாவது உணர தலைப்பட்டிருப்பது. வரலாற்றில் ஒரு திருப்பு முனையாக பார்க்கிறோம்- என்றார். (அ)

## டுபாய் சர்வதேச...

திஸாநாயக்க உள்ளிட்ட குழுவினர் நேற்று பிற்பகல் டுபாய் சர்வதேச விமான நிலையத்தை சென்றடைந்தனர்.

ஐக்கிய அரபு இராச்சிய வெளிநாட்டு வர்த்தகத் துறை இராஜாங்க அமைச்சர் கலாநிதி தானி பின் அஹமட் அல் செய்யூத் உள்ளிட்ட அரச பிரதிநிதிகள் ஜனாதிபதி உள்ளிட்ட குழுவினருக்கு மகத்தான வரவேற்பளித்ததாக ஜனாதிபதி ஊடகப்பிரிவு தெரிவித்தது.

ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க, மாஸ்டர் இன்வெஸ்ட்மென்ட் குழுமத்தின் பிரதம நிறைவேற்று அதிகாரியும், ராஸ் அல் கைமா ஆட்சியாளரின் மருமகனுமான ஷேக் அப்துல்லா பின் முஹம்மது அல் காசிமியை சந்திக்க உள்ளார்.

இலங்கைக்கும் ஐக்கிய அரபு இராச் சியத்துக்கும் இடையிலான பொருளா தார மற்றும் முதலீட்டு ஒத்துழைப்பை வலுப்படுத்துவது குறித்து இந்த சந்திப்பில் கவனம் செலுத்தப்படும்.

அதனைத் தொடர்ந்து டுபாயில் அமைந்துள்ள புகழ்பெற்ற எதிர்கால அருங்காட்சியகத்தில் நடைபெறும் இராப்போசன விருந்துபசாரத்திலும் ஜனாதிபதி பங்கேற்க உள்ளார். (அ)

## காங்கேசன்...

காங்கேசன்துறையில் இருந்து பய ணத்தை ஆரம்பித்து நாகபட்டினத்தைச் சென்றடையும்.

இந்த கப்பல் சேவையானது செவ்வாய் கிழமை தவிர்ந்து வாரத்தில் 6 நாட்கள் சேவையில் ஈடுபடும் என அந்த நிறுவனம் அறிவித்துள்ளது. (அ)

## தையிட்டி...

நிலையில் மக்கள் மீள்குடியேற, இரா ணுவத்தினர் கட்டம் கட்டமாக அனும தித்தனர். அவ்வேளை தற்போது விகாரை அமைந்துள்ள மற்றும் அதனை சூழவுள்ள சுமார் 14 ஏக்கர் காணியில் மக்கள் மீள குடியேற இதுவரை அனுமதிக்கப்படவில்லை.

குறித்த பகுதியில் எவ்வித அனுமதி களும் இன்றி, யாழ். மாவட்ட மற்றும் தெல்லிப்பழை பிரதேச ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டங்களில் விகாரையின் கட்டு மானப் பணிகளை நிறுத்தி அப்பகுதி களை மக்களிடம் மீள ஒப்படைக்குமாறு தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்ட போதிலும், காணிகள் மீளக் கையளிக் கப்படாது, இராணுவத்தினரின் உதவியு டன் விகாரை கட்டி முடிக்கப்பட்டுள்ளது.

குறித்த விகாரை அமைந்துள்ள காணி மற்றும் அதனைச் சூழவுள்ள காணிகளான 14 ஏக்கர் காணியையும் காணி உரிமை யாளர்களிடம் மீளக் கையளிக்கவேண் டும் என காணி உரிமையாளர்கள் சுமார் ஒரு வருட காலத்துக்கு மேலாக போராட் டத்தை முன்னெடுத்து வருகின்றனர்.

இந்நிலையில் இன்று செவ்வாய்க் கிழமை, நாளை புதன்கிழமை ஆகிய இரு நாட்களும் தொடர் போராட்டங்களை முன்னெடுக்கவுள்ளதாகவும் அதற்கு அனைத்து தரப்பினரும் ஆதரவு தெரிவித்து போராட்டத்தில் ஈடுபட வேண்டும் எவும் காணி உரிமையாளர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

காணி உரிமையாளர்களின் கோரிக்கையை அடுத்து , பல்வேறு தரப்பினரும் போராட்டத்துக்கு ஆதரவு தெரிவித்துள்ளனர். (அ)

## வவுனியா...

எதிர்வரும் உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் பொதுமக்களின் ஆலோசனை களையும் அபிப்பிராயங்களையும் கேட்டறிந்து மக்கள் மத்தியில் நன்மதிப்பை பெற்ற வேட்பாளர்களை இனங்கண்டு களம் இறக்குவது தொடர்பாக கலந்துரையாடியுள்ளோம்.

அந்தவகையில் வவுனியா வடக்கு பிரதேச சபைக்காக ஏனைய தமிழ்க் கட்சிகளோடு இணைந்து போட்டி யிடுவதாக தீர்மானிக்கப்பட்டுள்ளது.

அந்த பகுதியானது நீண்ட காலமாகச் சிங்களக் குடியேற்றம், பௌத்தமய மாக்கல் செயற்பாடுகளால் இனவிகிதா சாரத்தில் பாரிய மாற்றம் ஏற்படும் நிலைமை உள்ளது.

எனவே தமிழ் அரசுக் கட்சி மற்றும் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியோடும் பேசி அங்கு இணைந்து போட்டியிட முடியுமா என்பது தொடர்பாக கலந்துரையாடவுள்ளோம்.

கடந்த ஜனாதிபதி மற்றும் பாராளுமன்றத் தேர்தல்கள் போல இந்த தேர்தல் அமையாது. ஏனெனில் தேசிய மக்கள் சக்தி மக்களுக்கு வழங்கிய வாக்குறுதிகளை நிறைவேற்றமுடியாமல் திணறுகின்ற நிலைமையை அவதானிக்கிறோம். தேசிய மக்கள் சக்திக்கு வாக்களித்த பெரும்பாலான தமிழ் மக்கள் இன்று வருத்தப்படுகின்ற நிலைமையை காண்கின்றோம்.

எனவே உள்ளூராட்சி மற்றும் மாகாண சபைத் தேர்தல்களில் தமிழ் மக்கள் சரி யான முடிவை எடுக்கவேண்டும். எமது பிரதேசத்தில் நாங்களே ஆளுகை செய்ய வேண்டிய நிலையை உருவாக்கவேண்டும்.

அந்தவகையில் பலமான கூட்டணி யான ஜனநாயக தமிழ்த் தேசிய கூட்டணி யின் கரங்களை பலப்படுத்தவேண்டியது வடக்கு-கிழக்கு தமிழ் மக்களின் கடமையாக இருக்கிறது-என்றார். (அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழநாடு
Eelanadu

# தையிட்டி திஸ்ஸ விகாரைமீது எவரும் கைவைக்க இடமில்லை!

## உதய கம்மன்பில எச்சரிக்கை

யாழ்ப்பாணம், பெப். 11

"யாழ். தையிட்டியில் அமைந்துள்ள திஸ்ஸ ராஜமகா விகாரை மீது தமிழர்கள் எவரும் கைவைக்க இடமளிக்க மாட்டோம்" என பிவிதுரு ஹெல உறுமயவின் தலைவரும் முன்னாள் அமைச்சருமான உதய கம்மன்பில தெரிவித்தார்.



அத்துடன் தையிட்டி திஸ்ஸ ராஜமகா விகாரையை இடிக்க வேண்டும் என்று கூச்சலிடும் தமிழ் அரசியல்வாதிகளுக்கு இந்த விடயங்களைத் தெரிவித்துக்கொள் வதாகவும் உதய கம்மன்பில எச்சரிக்கை விடுத்துள்ளார்.

அத்துடன், தையிட்டியில் அமைந்துள்ள திஸ்ஸ ராஜமகா விகாரை சிங்கள-பௌத்தர்க ளுக்குச் சொந்தமானது என்றும் அது அமைந்துள்ள காணியும் தற்போது விகாரை நிர்வாகத் துக்கே உரித்தானது என்றும் தெரிவித்த அவர், இந்த விவகாரம் தொடர்பில் கதைப்பதற்குத் தமிழ் மக்களுக்கும் தமிழ்க் கட்சிகளின் பிரதிநிதிகளுக்கும் எந்த அருகதை யும் கிடையாது என்று மேலும் கூறினார். (அ)

## 43 எம்.பிக்களுக்கு அதிக இழப்பீடு; உரிய விசாரணை நடத்தவேண்டும்

### பிரதீப மஹாநாமஹேவா கோரிக்கை

கொழும்பு, பெப். 11

2022 அமைதியின்மையின்போது எரிக்கப்பட்ட வீடுகளுக்காக 43 எம். பிக்களுக்குத் தீ காப்பீட்டின் கீழ் வழங்கப்பட்ட இழப்பீடு குறித்து விசாரணை நடத்தவேண்டும் என்று கலாநிதி பிரதீப மஹாநாம ஹேவா கோரிக்கை விடுத்துள்ளார்.

2005 ஆம் ஆண்டு பேரிடர் மேலாண்மைச் சட்டத்தின் கீழ் நிர்வகிக்கப்படும் இலங்கையின் பேரிடர் நிவாரணக் கொள்கையின்படி, முழுமையாக அழிக்கப்பட்ட வீடுகளுக்கு இழப்பீடு ரூ. 2.5 மில்லியன் என்று அவர் கூறினார்.

இருப்பினும், பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு அதிக தொகைகள் ஒதுக்கப்படுவது குறித்துக் கவலை களை எழுப்பிய அவர், இந்தக் கொடுப்பனவுகளுக்கான சட்டபூர்வ அடிப்படையைக் கேள்விக்குள்ளாக்கினார்.

மஹாநாமஹேவாவின் கூற்றுப்படி, அப்போதைய பொது நிர்வாக அமைச்சரால் நியமிக்கப்பட்ட குழுவின் பரிந்துரைகளின் அடிப்படையில் முந்தைய அரசாங் கத்தால் இழப்பீடு தீர்மானிக்கப்பட்டது.

"சில எம்.பி.க்கள் இழப்பீடு கோரவில்லை. ஆனால் அவர்களுக்கு இழப்பீடு வழங்கப்பட்டதாகக் கூறியுள்ளனர். அது எப்படி நடக்கும்? யார் இவற்றை அங்கீகரித்தார்கள்?" என்று அவர் கேள்வி எழுப்பினார். இந்தக் குழு பயன்படுத்தும் அளவுகோல்களை மறுபரிசீலனை செய்யுமாறு அதிகாரிகளை அவர் வலியுறுத்தினார்.

பாதிக்கப்பட்ட பல எம்.பிக்கள் ஏற்கனவே சேதம டைந்த சொத்துக்களுக்கு காப்பீட்டுத் தொகையைப் பெற்றுள்ளதாகவும் அவர் தெரிவித்தார். (அ)

## "ஜே.வி.பியினரே இழப்புகளை ஏற்படுத்தத் தூண்டியவர்கள்"

### விரைவில் நீதிமன்றம் செல்வோம் என்கிறார் முன்னாள் எம்.பி.

கொழும்பு, பெப். 11

இழப்புக்களை ஏற்படுத்தியவர்கள் தான் தற்போது நாம் இழப்பீடுகள் பெற்றுக் கொண்டமையை விமர்சிக்கின்றனர். எமது இல்லங்களை தீக்கிரையாக்கி சொத்துக்களுக்கு சேதம் விளைவித்தவர்கள், அதற்கு தூண்டியவர்களை நாம் இனங்கண்டுள்ளோம். அவர்களுக்கெதிராக நீதிமன்றம் சென்று அவர்களிட மிருந்து இழப்பீட்டைப் பெற்றுக்கொள்ள சட்ட நடவ டிக்கை எடுக்கப்படும் என முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் பிரேம்நாத் சி தொலவத்த தெரிவித்தார்.

கொழும்பில் ஊடகங்களுக்கு கருத்து வெளியிடும் போது இதனைத் தெரிவித்த அவர் மேலும் குறிப்பிடுகையில்-

தற்போது அரசியல்வாதிகள் சொத்து சேதங்களுக்காக பெற்றுக் கொண்ட இழப்பீடு குறித்து பெரிதாகப் பேசும் ஜே.வி.பி. 1980களில் பாரியளவில் அரச சொத்துக்களுக்கு சேதப்படுத்தியதை மறுக்க முடியாது.

அந்த சந்தர்ப்பத்திலும் அவற்றுக்காக நிதி ஒதுக்கப்பட்டு இழப்பீடுகள் வழங்கப்பட்டன.

இம்முறையிலும் இவ்வாறு அரசியல்வாதிகளின் சொத்துக்களுக்கு சேதம் ஏற்படுத்தப்பட்டமை தொடர்பில் கைது செய்யப்பட்டுள்ளவர்களில் பெரும்பாலான சந்தேகநபர்கள் ஜே.வி.பி. ஆதரவாளர்களே.

அவர்கள் சேதங்களை ஏற்படுத்தியமைக்கு இவர்களே முன்னின்று வழிகாட்டினர். எனது வீட்டை மீளப் புனரமைப்பதற்கும், அழிக்கப்பட்ட சொத்துக்களுக்கும் 23 இலட்சம் இழப்பீடு கிடைக்கப் பெற்றது. எனது வீடு சேதப்படுத்தப்பட்டமை தொடர்பில் 10 சந்தேக நபர்கள் கைது செய்யப்பட்டனர்.

மேலும் லசந்த விக்கிரமதுங்க கொலை தொடர்பில் மாத்திரமின்றி, 141 கோடி இழப்பீட்டைப் பெற்றுக் கொள்ள வேண்டிய நிலைமையை ஏற்படுத்தியவர்கள் தொடர்பிலும் ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க சட்டமா அதிபரிடம் கலந்தாலோசித்திருக்க வேண்டும்.

சட்டமா அதிபர், பொலிஸ் ஆணைக்குழு, நீதிமன்ற தீர்ப்பின் மீது கூட அரசாங்கத்தின் அழுத்தம் பிரயோகிக்கப்படுகிறது. இது மிகவும் அபாயம் மிக்க நிலைமையாகும்- என்றார். (அ)

#### இலங்கை - இந்திய மீனவர் விவகாரம்:

## இந்திய பாராளுமன்றில் நேற்று ஒத்திவைப்புவேளை பிரேரணை

புதுடில்லி, பெப். 11

14 இந்திய மீனவர்களை இலங்கைக் கடற்படையினர் கைது செய்தமை தொடர்பில் விவாதிப்பதற்காக இந் தியத் தேசிய காங்கிரஸ் பாராளுமன்ற உறுப்பினர் மாணிக்கம் தாகூர் நேற்று இந்திய பாராளுமன்றில் ஒத்திவைப்பு வேளை பிரேரணையொன்றை முன்வைத்தார்.

இந்த பிரேரணையை முன்வைத்து உரையாற்றிய அவர், கைது செய்யப்பட்ட இந்திய மீனவர்களை உடனடியாக விடுவிப்பதற்கும், அவர்களின் படகு களைத் திருப்பி அனுப்புவதற்கு இலங்கைக்கு இந்திய அரசாங்கம் அழுத்தம் கொடுக்கவேண்டும் எனவும் கோரினார்.

அத்துடன், சர்ச்சைக்குரிய கடற்பகுதிகளில் செயல் படும் இந்திய மீனவர்கள் தொடர்பான கண்காணிப்பு மற்றும் ஆதரவு அதிகரிக்கப்படவேண்டும் எனவும், நீண்டகால தீர்வு காணப் பேச்சுகள் நடத்தப்பட வேண்டும் என்றும் இந்தியத் தேசிய காங்கிரஸ் பாராளுமன்ற உறுப்பினர் மாணிக்கம் தாகூர் வலியுறுத் தியுள்ளார். (அ)

## பதில் அமைச்சர்கள் நியமனம்

கொழும்பு, பெப். 11

ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க ஐக்கிய அரபு இராச்சியம் சென்றதையடுத்து, முக்கிய அமைச்சகங்களை மேற்பார்வையிட நான்கு பதில் அமைச்சர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர்.

ஜனாதிபதியின் ஊடகப் பிரிவின்படி, ஜனாதிபதியின் கீழ் உள்ள நான்கு அமைச்சுகளுக்கு பதில் அமைச்சர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர்.

நியமிக்கப்பட்ட தற்காலிக அமைச்சர்களின் விவரங்கள் பின்வருமாறு-

டிஜிற்றல் பொருளாதார பதில் அமைச்சர் - பிரதி அமைச்சர் எரங்க வீரரத்ன

பதில் பாதுகாப்பு அமைச்சர் - பாதுகாப்பு பிரதி அமைச்சர் அருண ஜெயசேகர

நிதி, திட்டமிடல் மற்றும் பொருளாதார மேம்பாட்டுக்கான பதில் அமைச்சர் - தொழிலாளர் அமைச்சர் மற்றும் பொருளாதார மேம்பாட்டுக்கான பிரதி அமைச்சர் கலாநிதி அனில் ஜெயந்த பெர்னாண்டோ

வெளியுறவு, வெளிநாட்டு வேலைவாய்ப்பு மற்றும் சுற்றுலாத்துறை பதில் அமைச்சர் - வெளிநாட்டு வேலைவாய்ப்பு பிரதி அமைச்சர் அருண் ஹேமசந்திர. (அ)

# மீனவர்கள் கைது விவகாரத்தில் வாக்குறுதியை மீறிய இலங்கை!

## தூதரக நடவடிக்கை மேற்கொள்ளுமாறு ராமதாஸ் வலியுறுத்து

சென்னை, பெப். 11

மீனவர்கள் கைது செய்யப்படும் விவகாரத்தில் வாக்குறுதியை மீறிய இலங்கை மீது இந்தியா தூதரக நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும் என பா. ம. க நிறுவனர் ராமதாஸ் வலியுறுத்தியுள்ளார்.

இது குறித்து அவர் வெளியிட்ட அறிக்கையில்- வங்கக்கடலில் மீன்பிடிக்கச் சென்ற ராமேஸ்வரம் பகுதி மீனவர்கள் 14 பேரை கைது செய்து சிறையில் அடைத்துள்ள இலங்கைக் கடற்படை அவர்களின் இரு படகுகளையும் பறிமுதல் செய்திருக்கிறது. தமிழ்நாட்டு மீனவர்களின் வாழ்வாதாரத்தை சிதைக்கும் வகையில் இலங்கை கடற்படையினர் தொடர்ந்து இத்தகைய அத்துமீறலில் ஈடுபட்டு வருவது கண்டிக்கத்தக்கது.

2025 ஆம் ஆண்டு தொடங்கி இன்றுடன் 41 நாட்கள் மட்டுமே ஆகும் நிலையில் இதுவரை 77 தமிழக மீனவர்கள் கைது செய்யப்பட்டு சிறைகளில் அடைக்கப்பட்டுள்ளனர். அவர்களுக்கு சொந்தமான 7 மீன்பிடிப் படகுகளும் பறிமுதல் செய்யப்பட்டு நாட்டுடைமையாக்கப்பட்டுள்ளன. 2024 ஆம் ஆண்டில் 530 மீனவர்கள் கைது செய்யப்பட்டதுடன் 71 மீன் பிடிப் படகுகளும் பறிமுதல் செய்யப்பட்டிருக்கின்றன. இப்போது கைது செய்யப்பட்டவர்களையும் சேர்த்து மொத்தம் 111 மீனவர்கள் இலங்கை சிறைகளில் வாடிக் கொண்டிருக்கின்றனர். அவர்களுக்குச் சொந்தமான 218 மீன்பிடி படகுகளும் பறிமுதல் செய்யப்பட்டுள்ளன.

தமிழக மீனவர்கள் இலங்கைக் கடற்படையினரால் தொடர்ந்து கைது செய்யப்பட்டு வருவதும் அதற்கு நிரந்தரத் தீர்வு காணாமல் மத்திய மாநில அரசுகள் வேடிக்கைப் பார்த்துக் கொண்டிருப்பதும் மீனவர்கள் நலனுக்கும் இந்திய இறையாண்மைக்கும் எந்த வகையிலும் வலு சேர்க்காது. இந்த சிக்கலுக்கு விரைந்து தீர்வு காண நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.

கடந்த ஆண்டு ஒக்ரோபர் 29 ஆம் திகதி இந்தியா - இலங்கை ஆகிய இரு நாடுகளின் மீனவர்கள் நலனுக் கான கூட்டுப் பணிக்குழு கூட்டம் கொழும்பில் நடை பெற்றது. அப்போது மீனவர்கள் கைது செய்யப்படுவது அவர்களின் வாழ்வாதாரம் சம்பந்தப்பட்டது என்பதால் இந்த சிக்கலை மனித நேயத்துடன் அணுகுவது என்று தீர்மானிக்கப்பட்டது. அதுமட்டுமின்றி இரு நாட்டு மீனவர் அமைப்புகளின் பேச்சுகளுக்கு விரைவாக ஏற்பாடு செய்ய வேண்டும் என்று இந்திய தரப்பில் வலியுறுத்தப் பட்டதை இலங்கைத் தரப்பு ஏற்றுக் கொண்டது. ஆனால், அதன்பின் 100 நாட்களுக்கு மேலாகியும் இந்த இரு வாக்குறுதிகளையும் இலங்கை அரசு இன்று வரை நிறைவேற்றவில்லை.

தமிழக மீனவர்கள் எதிர்கொண்டு வரும் பிரச்னைகள் தொடர்பாக இலங்கை அரசுடன் இந்திய அரசு பேச வேண்டும். மீனவர்கள் நலன் தொடர்பாக அளிக்கப் பட்ட வாக்குறுதிகளை நிறைவேற்றும்படி இலங்கை அரசு இந்தியா வலியுறுத்த வேண்டும். அதையும் மீறி தமிழக மீனவர்களுக்கு எதிரான செயல்களில் இலங்கை அரசு ஈடுபட்டால் அதன்மீது தூதரக நடவடிக்கைகளை இந்திய அரசு மேற்கொள்ள வேண்டும்-எனத் தெரிவித்துள்ளார். (அ)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் நிறுவனத்தினரால் 11. 02. 2025 அன்று ஏ9 வீதி, நாவற்குழியில் உள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.